தென்மொழி

சுவடி: 8.

ஓலை: 1, 2.

விலை

75 காசு.

பொதுமை உலகம்!

ஒருதாய்நிலம்! ஒருதாய்மொழி!
உருவம், நிறம் ஒன்றே!-வாழ்
வுரிமை தனி அன்றே!-எனிற்
கருதாய் உடன் பிறந்தோர் பலர்
கண்ணீர்விடல் நன்றே?-அவர்
கவலை யறல் என்றே?

உருகாய் மனம்; உணராய் நிலை;
உழைப்போர் துயர் ஒருநாள்-கரை
உடைத்தேவெளி வருநாள்-புயல்
உருவாய் வரும்; பெறுவார் பலன்!
உண்மை இதை உணர்வாய்!-பொது
வுடைமை மனம் புணர்வாய்!

மனைகள் பல வெடுப்பார், தெரு
மண்ணில் புரள் வதுவோ?-உளம்
மறுகிக்குலை வதுவோ?-நாம்
புனைதற்குடை தருவார், வெறும்
புழுவாய் உருள் வதுவோ?-உடல்
புழுதி படி வதுவோ?

பனியும் மழை வெயிலும் குளிர்
பாரா துழைத் திடுவார்-பயிர்
பலவும் விளைத் திடுவார்-இங்
கினியும் பசித் துயரால், உயிர்
இழத்தல் தொடர் கதையோ?-சிலர்
இறுமாந் திடல் நிலையோ?

உலகம் பொது; உழைப்பும்பொது;
உரிமை பொது வைப்போம்!-அதன்
உடைமைநலந் துய்ப்போம்-மிகச்
சிலரால் பலர் நலியும் நிலை
சிதைப்போம்; துயர் புதைப்போம்-பொதுச்
சீர்மை நலம் விதைப்போம்!

னித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

நமக்கு வந்த மடல்கள்.

எண்: 185: தங்கள் கடந்தகால நண்பர்கள் எங்கே?

அன்பீர்! தங்கள் மடல் பெற்றேம். குற்றமே காணும் குணம் தவிர்க்கவும். கடலூரில் நகராட்சி மன்ற உயர் துவக்கப் பள்ளியில் ஆசிரியராக உள்ள.........என்ற ஆசிரியர், 'தென்மொழி' என்ற புனை பெயரில் வெண்பாக்களை எழுதுகிறார். 'சங்க'காலப் புலவனின் பெயரைத் தாங்கள் வைத்திருக்கும்போது 'தென்மொழி' என்ற பெயரை ஓர் ஆசிரியர் வைத்துக்கொள்ளக் கூடாதா? என்ன இருந்தாலும் இவ்வளவு தன்னலம் கூடாது...... தங்களைப் போல் தமிழின் பேராலும் இல்லாத இறைவன் பேராலும் வாழுபவனல்ல(ன்). கையுழைப்பாலும், அறிவுழைப்பாலும் வாழ்பவன். தங்களைப் போன்றவர்களை வள்ளுவர் இனங்காட்டியுள்ளார். "நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும் பேணாமை பேதை தொழில்"-என்ற குறட்கு எடுத்துக்காட்டு தங்கள் 'அரியமடல்'! தங்களிடமிருந்து மடல் வருவதை விரும்பவில்லை. காரணம் வள்ளுவர் கூறுகிறார். "கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு, சொல்வேறு பட்டார் தொடர்பு" ஐயா, எந்தக் காழ்ப்புணர்ச்சியினாலும் யான் மடல் எழுதவில்லை. எனக்கும் தங்கட்கும் என்ன தொடர்பு? சிறைக்கு அஞ்சி ஓடியவனல்லன் நான். எனக்கு நல்ல 'மனிதனாய்' வாழும் கொள்கையுண்டு. ஊர்ப்பணத்திற்கு அவாவும் குணம் கிடையாது. தங்கள் கடந்தகால நண்பர்கள் எங்கே? இதனை நினைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள். தன் பெண்டு- தன்பிள்ளை வாழ்வினரே! பிறரை எள்ளுவதால் எய்தும் பயன் என்ன? உங்கள் கடவுள் உங்களைக் காப்பாற்றட்டும்!

—'காவேரிக் கவிராயர்' என்னும் த. கோவேந்தன், சென்னை-24,
'நாத்திகம்' அலுவலகத்திலிருந்து.

(குறிப்பு: 'நாத்திகம்' என்னும் நாளிதழில் தப்புந் தவறுமாக வெளிவரும் போட்டி வெண்பாக்களில், தென்மொழி கடலூர்-1. என்று பெயரிட்டு ஒருவர் எழுதிவந்த வெண்பாக்களைப் பார்த்து, "பதிவு செய்த ஒருதாளிகையின் முகவரியில் அவ்வாறு வெண்பாக்களை வெளியிடுவது தவறு" என்று அறிவித்த மடல்களுக்கு விடையாக வந்த மடல் இது. இங்குக் குறிப்பிடப்பெற்ற என் மடல் "என் இயக்கம் பற்றிய சில விளக்கங்கள்" என்னுந் தொடர்கட்டுரையிற் பின்னர் வெளியிடப்பெறும்—ஆ-ர்.)

எண்: 186: இதோ, இங்கே...!

.......மூன்றாண்டுப் பிரிவிற்குப் பின்னர் சந்தித்தபோதும் தங்கள் உருவிலும் திருவிலும் எங்கள்பால் தாங்கள் கொண்டிருந்த அன்பிலும் எவ்வகை மாற்றத்தையும் என்னால் காண இயலவில்லை. முன்பை விடப் பன்மடங்கு தங்கள்பால் ஒளிர்ந்து சிதர்கின்ற அன்புக் கதிர்கள் என்னுடையவும், எங்கள் எல்லாருடையவும் உள்ளங்களையெல்லாம் ஊடுருவி அதற்கப்பாலும் செல்லுகின்ற பான்மையை எண்ணி எண்ணி வியக்க நேர்ந்தது. தண்மையும், தாய்மையும், முதுமையும், அமைதியும், நல்லறிவும் ஒருங்கே பெற்ற நற்றாய் ஒருத்தியின் மடி

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்)

தென்மொழி

இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி:8 ஓலை: 1, 2.

(கும்பம், மீனம் தி. பி. உ00க-பெப், மார்ச்சு, ஏப்.-1970)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

சுந்தரவடிவேலனார் சொன்னது சரியா?

சென்னைப் பல்கலைக்கழகத் துணைக்கண்காணகர் உயர்திரு. நெ. து. சுந்தரவடிவேலனார் அண்மையில் திருச்சியில் நடந்த இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர்களின் இரண்டாவது கருத்தரங்குக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில், உண்மைத் தமிழ்நெஞ்சங்கள் துணுக்குறும் வகையில் ஒரு கருத்தை அறிவித்துள்ளார். அவர் பேசியதற்கு உள்நோக்கம் எதுவென்று உணரக் கூடாமற் போயினும், அவர்போலும் பதவியில் இருப்போரும், தமிழர் நலம் கருதுவோரும் அத்தகைய கருத்தை வாயவிழ்த்து உதறியிருக்கக் கூடாதென்றே நாம் கருதுகின்றோம். அவர் கூறியவற்றின் சுருக்கம் இது: பின்லாந்தி

லுள்ள தமிழ் அறிஞர்கள் பலர் தமிழ் எண்சுவடி பற்றி ஆராய்ச்சி நடத்தி வருவதாகவும், அதே போல தில்லியில் உள்ள திரு ஐ. மகாதேவன் என்ற ஐ. ஏ. எசு. அதிகாரியும் ஆராய்ச்சி நடத்தி வருவதாகவும், ஆனல் தமிழ்நாட்டில் யாரும் இத்தகைய ஆராய்ச்சியில் ஈடுபடாதிருப்பது தமிழ்நாட்டின் தீயூழே (அவர் சொன்னதாகச் செய்தித்தாள்களில் வந்திருப்பது 'துரதிருஷ்டவசம்') ஆகும்''

இவர் சொற்பொழிவைப் படித்தவுடன் நமக்கு முதலில் வந்த ஐயம், இவர் சென்னைக்கு வந்துவிட்டாரா அல்லது இன்னும் தில்லியிலேயே உள்ளாரா என்பதுதான். தில்லியில் இருந்தாலும் தமிழகத்தைப்பற்றித்தெரிந்திருக்கவேண்டிய சில செய்திகளை உயர்திரு, சுந்தரவடிவேலனர் அவர்கள், பல்கலைக் கழகத் துணைக் கண்காணராகச் சென்னையில் இருந்துகொண்டே நேரிடையாகவேனும் அன்றிப் பிறர் வழியாகவேனும் இன்னும் தெரிந்து கொள்ளாமல் இருப்பது மிக மிக வருந்தத்தக்கதாகும். இவர் மட்டுமின்றி, அரசுப் பதவிகளில் உள்ள பிறரும் அடிக்கடி இதுபோல் கூறக்கூடாதனவற்றையும் தாம் அறியாதனவற்றையும் அடிக்கடி தத்துப்பித்தென உளறிக்கொட்டுவதெல்லாம், இப்பொழுது எளிமையாக நடைபெற்று வரும் பொது நிகழ்ச்சியாகப் போய்விட்டது. அதுவும் தமிழாராய்ச்சி பற்றிக் கல்வித்துறையில் உள்ள எல்லாரும் குறைநிறை பேசுவதும் மிகவும் மலிந்த சரக்காகி விட்டது. இல்லையெனில் ஐ. ஏ. எசு. படித்துவிட்டு ஏதோ ஒரு மாவட்ட ஆட்சித் தலைவராக அமர்ந்து அமைச்சர்களின் கடைக்கண் பார்வைக்கு ஏங்கிக் கிடக்கவேண்டியவர்கள் தமிழ் எழுத்துகளைப் பற்றியும் எண்சுவடி பற்றியும் ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருப்பார்களா? அவர் ஆராய்ச்சித்திறனைப்பற்றி ஒரு பல்கலைக் கழகத்தின் துணைக் கண்காணகராக இருந்து கல்வித்துறை அமைப்புப் புறநிலைகளைப் பற்றிக்கருத்தறிவிக்க வேண்டியவர் ஆராய்ச்சி அகநிலைகளைப் பற்றிக் கருத்தறிவித்துக் கொண்டிருப்பாரா?

இவர் பெரும் ஆராய்ச்சியாளராக மதித்தொழுகும் திரு. ஐ. மகாதேவன் என்பவரைப் பற்றித் தமிழன்பர் நன்கு அறிந்திருப்பர் என்று கருதுகின்றோம். இவர்தாம் கடந்த 1966-ஏப்பிரலில் சென்னையில்நடந்த இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் "கி, மு. இரண்டாம் நூற்றுண்டிற்கு முன்னர் தமிழில் எழுத்துகளே இல்லை" என்று நுண்மாண் நுழைபுல ஆராய்ச்சி(!) வன்மையினுல் கண்டுபிடித்துச் சொன்ன ஆராய்ச்சிப் புலி! இவரைப் பற்றித்தான் நம் துணைக் கண்காணகர் திரு. நெ. து. சு. சொல்கின்றுர் "இவர்போல் ஆராய்ச்சி செய்பவர் நம் தமிழ்நாட்டில் இல்லாதது நம் நாட்டின் தீயூழ்"-என்று.

எப்படி? ஆரியமாயை நம்மவரை எத்துணையளவு பிடித்து உலுக்கிக் கொண்டுள்ளது பார்த்தீர்களா? சரி; அத்தகைய ஆராய்ச்சியாளர்கள் தமிழ்நாட்டில் இல்லாதது ஏன் என்பதற்கு நம் துணைக் கண்காணகர் என்ன விடை சொல்வார்? "ஏன் ஐயா, தமிழ் ஆட்சி மலர்ந்திருக்கின்ற இந்த வேளையில், ஒரு பச்சைத் தமிழர் பல்கலைக் கழகத்தின் தலைமை யிடத்தில் அமர்ந்திருக்கின்ற இந்த நிலையில், திரு. ஐ. மகாதேவனைப் போல் ஓர் ஆராய்சியாளர் ஏன் தோன்றவில்லை?" அதற்கு இதுதான் விடை: "உண்மைத் தமிழ் ஆராய்ச்சியாளர்களை ஆட்சித்துறையில் இருப்போர் ஏறெடுத்தும் பார்க்கவில்லை; அப்படி யாராவது தமிழ்நாட் டில் இருக்கின்றாரா என்று கேட்டுத் தெரிந்து கொள்வதில்கூட நம் ஆட்சியாளர்கள் அக்கறை செலுத்தவில்லை; அப்படிப்பட்டவர்களின் எண்ணற்ற ஆராய்ச்சி நூல்களைத் தொட்டுப் பார்க்கவும் அவர்கள் விரும்பவில்லை; அவ்வாறு ஓரிருவர் இருந்தாலும் அவர்களைப் பாராட்டிப் பேணி அவர்கள் ஆராய்ச்சியைப் பயன்படுத்திக் கொள்ளத் துணி வில்லை; நடுநிலைமையில்லை; பொதுமையுணர்வில்லை" இதுதான் உண் மையான கரணியமாக- விடையாக அவர்க்கு அமையும்! இதே கேள் வியையும் விடையையும், அல்லது இதே நிலையையுந்தான் உயர்திரு, சுந்தரவடிவேலனார் அவர்களும் ஆட்சித்துறையில் உள்ள பிறரும் விரும்புகின்றனரா? அல்லது அவர்களுக்காகவன்றிப் பிறர்க்காகவே னும், பிறங்கடையினர்க்காகவேனும், இந்தத் தமிழ் நாட்டிற்காகவே னும் இவர்கள் தங்கள் ஊமைநிலைகளை மாற்றிக்கொள்ளப் போகின் றனரா என்று கேட்க விரும்புகின்றோம்.

கடந்த நாற்பது ஆண்டுகளாக, தமிழகத்திற்கே மிகவும் புதியதாக விருந்த மொழித்துறையில், தம் மனைவி, மக்கள், உற்றார், பெற்றோர் எவரையும் கவனியாது, பொதுநலம் ஒன்றே கருதி, தன்மானவுணர்வி லும், தன்னறிவுத்திறனிலும், தாய்மொழிப்பற்றிலும், பலவாறு தாழ்த் தப்பட்டும் வீழ்த்தப்பட்டும் கிடக்கின்ற வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இத் தமிழப் பெருங் குமுகாயத்தைத் தூக்கி நிறுத்த, அல்லும் பகலும் பாடுபட்டுவரும் மொழியியல் ஞாயிறு, பன்மொழிப் பகலவன், பெரும் பேராசிரியர் ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள், திரு, சுந்தரவடி வேலனார் எந்தத் தமிழ்நிலத்தில் ஐ. மகாதேவனைப்போல ஆராய்ச்சி யாளர்களே இல்லை என்று அங்கலாய்த்தாரோ, அந்தத் தமிழ் மண் ணில்தான் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அவருடைய நுண் மாண் நுழைபுல ஆராய்ச்சி வன்மைமுன், ஐ. மகாதேவனைப் போன் றோரின் ஆராய்ச்சி, செங்கதிர்முன் சிறுதுளியாய், புடைசீய்க்கும் கோளரிமுன் நடைமெலிந்த சிறுநரியாய் வலிவிழந்து சாம்பிப்போகும்

என்பதை நாம் சொல்ல விரும்பவில்லை; காலம் இனிச் சொல்லும்; கற்றுணர்வார் இனிச் சொல்வர். அக்கால் திரு. சுந்தரவடிவேலனார் கூற்றும், நம் ஆட்சியாளர் அமைதித்தனமும் புறக்கணிப்பும் எள்ளி இகழப்படும். அதுவரை பொறுத்திருக்க நமக்குத் தெரியும்.

இனி, அவர் வெளியிட்ட இன்னொரு செய்தியும் கருதத்தக்கது. "சென்னைப்பல்கலைக் கழகநூலகத்திற்கெனச்சென்ற ஆண்டில் நூல்கள் வாங்க ஒதுக்கப்பட்ட தொகை ஓரிலக்கத்துள், தமிழ் நூல்களுக்காக உரு. 3000உம் கூட, சென்ற ஆண்டில் புதிய நல்ல தமிழ்நூல்கள் வெளிவராததால், பயன்படுத்தப்படாமல் இருக்கிறது" என்றார் திரு. சுந்தரவடிவேலனார். இவர் பேச்சைக்கேட்டு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. முதற்கண் நூலகத்திற்கென்று ஒதுக்கப்பட்ட உருபா ஓரிலக்கத்துள் தமிழ் நூற்களுக்கென ஒதுக்கப்பட்ட உருபா மூவாயிரம் மிக மிகக் குறைவான தொகை. இத்தொகைக்குக்கூட நல்ல நூல்களை வாங்க முடியவில்லை என்று வருந்தும் திரு. சுந்தரவடிவேலனாரும், ஆட்சித்துறையும் நல்ல நூல்கள் வெளிவர என்ன முயற்சி எடுத்துக் கொண்டனர்? எத்தனை உண்மையான தமிழ் நூலாசிரியர்கள்தம் நூல் வெளியீட்டுக்கு உதவி செய்தனர்? அவ்வாறு எந்த நல்ல முயற்சியிலும் ஈடுபடாமல், வெறுமனே வாய்புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று இத்தகைய கருத்துகளை வீசிவிடுவதால் எந்தப் பயனும் விளைந்துவிடப் போவதில்லை. பாவாணரைப் போன்ற ஓரிரு ஆய்வாளர்கள் தம் கருத்துகளை நூலாக்கப் போதிய வாழ்க்கை யமைப்புகள் அமையவில்லையே என்றும், எழுதிவைத்துள்ள எண்ணற்ற நூல்களை வெளியிடப் போதிய பொருள்நிலை வாய்க்கவில்லையே என்றும் ஒருபுறம் உளமும் உயிரும் வருந்திச் சாம்பிக்கொண்டிருக்கும் இவ்வேளையில், சிறந்த ஆராய்ச்சியாளர்கள் இல்லையென்றும், போதிய தரமான நூல்கள் வெளிவரவில்லை யென்றும் ஒப்பாரி வைத்துக் கொண்டிருப்பது நம் நாட்டிற்கும், ஆட்சித்துறைக்கும், கல்வித்துறைக்கும் பெரிய இழிவாகும். 'தென்மொழி' போன்று தூய தமிழ் வளர்க்கும் தாளிகைகளை நம் நாட்டிலுள்ள நூலகங்கள் அனைத்திலும் வாங்கிப்போட்டுத் தமிழ் வளர்த்தால், எங்குத்தம் நூல்கள் எடுபடாமற் போய்விடுமோ என்னும் அச்சத்தாலும், பொருமையாலும், கண்டுங் காணாததுபோல் கண்களையும், கேட்டுங்கேளாததுபோல் காதுகளையும் திருப்பிக்கொள்ளும் நம் ஆட்சியாளர்க்கும், கல்வித்துறைக்கும் நம் வருத்தத்தையும் நாணத்தையும் தெரிவித்துக்கொள்வதைவிட வேறு வழியில்லை.

மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்?
விழியிலார்க் கேது விளக்கு?

-பெருஞ்சித்திரன்.

உலகத் தமிழ்க் கழகக் கொள்கை.

-மொழிப் பேரறிஞர். ஞா. தேவநேயப்பாவாணர்.

உலகத் தமிழ்க் கழகம் தோன்றி ஒன்றரை யாண்டிற்கு மேலாகி யும், இன்னும் அதன் கொள்கையைப் பலர் செவ்வையாக அறியா திருப்பதால், அவர்க்கு அதை அறிவித்தற்பொருட்டு இக்கட்டுரையை எழுதலானேன்.

பல்லாயிரம் ஆண்டுகளாகப் புறப்பகைவரான ஆரியராலும் அகப்பகைவரான போலித் தமிழராலும், மறையுண்டும் குறையுண் டும் போற்றுவாருந் தேற்றுவாருமின்றிப் புன்சிறு கலவை மொழி போற் புறக்கணிக்கப்பட்டுக் கிடந்த முதுகுமரி முத்தமிழை, நிறை புலமுடியாம் மறைமலையடிகளைப் பின்பற்றி, உலகமுதல் உயர்தனிச் செம்மொழியென மீண்டும் உலகெலாம் உலவிவரச் செய்து பண்டை யரியணை யேற்றுவதே, உலகத் தமிழ்க் கழகத்தின் ஒருபெரு நோக்க மாம்.

பண்பாடு சிறிதுமின்றிப் பட்டம் பதவியே பற்றிக் கட்சித் தலை வர் காலில் விழுவதும், இறைவன் பொருள்சேர் புகழை இற்றை யமைச்சர்க்கு ஏற்றிக் கூறுவதும், தந்நலமொன்றே கருதித் தாய் மொழியைப் புறக்கணிப்பதும், தனித்தமிழ்ப் பற்றற்றவரைத் தலைமை யாகப் போற்றுவதும், எத்துணை கற்பினும் தெள்ளியராகாது என் றும் பொருளீட்டுவதையே குறிக்கோளாகக் கொள்வதும், தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரின் தகுதியை நோக்காமையும், மாபெரும் தமிழ்மலையாம் மறைமலையடிகளை மறைக்க முயல்வதும், அறிஞர் ஆய்ந்துகண்ட உண்மைகளை ஒப்புக்கொள்ளாது தான் பிடித்த முயற்கு மூன்றே காலென வலிப்பதும், பொன்னைப் பித்தளையென் றும் பித்தளையைப் பொன்னென்றும் திரிபுணர்ச்சியைப் பரப்புவதும், இந்தியால் தமிழுக்கும் தமிழர்க்கும் கேடென வறிந்தும் அதை விலக்காது "எங்கெழிலென் ஞாயிறெமக்கு" என்றிருப்பதும், உல கத் தமிழ்க் கழகக் கொள்கை யல்ல.

"காமாலைக்காரனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்" என்பது போல, கட்சிப்பற்றுளர்க்குக் கட்சிக்காரர் செய்வதெல்லாம் புன்செய லும் வன்செயலுமா யிருப்பினும், கண்ணியமும் கட்டாண்மையு மாகவே தோன்றும். யானையைத் தடவிக்கண்ட நாற்குருடர் தாங் கண்டவாறே பிறருங் காண்பரென்று கருதிக்கொண்டதுபோல, ஒரு பொருளைப்பற்றித் தாங்கொண்ட கருத்தே பிறருங் கொள்வரென்று

கருதிக்கொள்வது கட்சிக்காரர் இயல்பு. தந்நலமன்றி ஒரு கொள்கையுமற்ற போலித் தமிழர் உயரிய கொள்கையுடைய உலகத் தமிழ்க் கழகத்தைக் கொள்கையில்லாததென்று கூறுவது, கடுகளவும் மொழியறிவும் தாய்மொழிப் பற்றுமில்லாப் பேராயத்தார் மறைமலையடிகளையும் அவர்கள் வழிச் செல்வோரையும் அறிவிலிகள் என்று பழிப்பதொத்ததே.

தமிழ்நாடு இன்னும் விடுதலையடைய வில்லை. ஆங்கிலேயன் தமிழனுக்கு மீட்பனாக வந்தானேயொழிய அடிமைப்படுத்தியாக வரவில்லை, மாபெரு நன்மை செய்தவனை மாபெருந்தீங்கு செய்தவனாகக் கருதுவது,

"பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டூதியம் போக விடல்."

என்னுந் திருக்குறட்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டே யாகும். அது போன்று இற்றையாட்சியைத் தமிழாட்சியாகக் கருதுவதும் பேதைமையின்பாற்பட்டதே. ஆரிய ஆட்சிபோய்த் திரவிட ஆட்சி வந்துள்ளது. ஆரிய ஆட்சிக்குப்பின் உடனடியாகத்தமிழாட்சி வரமுடியாது. விரைநடை அடியெடுத்து வைப்பிற்கும் ஓட்டத்திற்கும் இடைப்படுவது இன்றியமையாதது. அதுபோன்றே, திரவிட ஆட்சியும் ஆரிய ஆட்சிக்கும் தமிழாட்சிக்கும் இடைப்பட்டுத் தீரவேண்டும். இனிமேல் தான் தமிழாட்சி வரவியலும்.

தமிழாட்சியின் அறிகுறிகளாவன:-

க. தமிழைப் பண்படாத பன்மொழிக் கலவையென்றும் வடமொழிக் கிளையென்றும் காட்டித்தமிழனை நாகரிகமற்றவனென்றும் காட்டுவிலங்காண்டியென்றும் இழித்தும் பழித்துங்கூறும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகரமுதலி, திருத்தப்பெற்றுச் சிந்துவெளி நாகரிகப் பழம் பொருள்களை ஆராயும் பின்னிய அறிஞரைச் செவ்வையாக ஆற்றுப்படுத்தல்.

உ. அமைச்சர் மட்டுமன்றித் தமிழரெல்லாரும் தமிழ்ப்பெயரே தாங்கல்.

ங. தமிழ்வாயிற் கல்வி கலவை மொழியில் நடைபெறாது தனித் தமிழில் நடைபெறுதல்.

ச. முழுநிறைவான செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி தொகுக்கப்பெறல்

ரு. மறைமலையடிகள் வழிப்பட்ட தனித்தமிழறிஞர் தக்கவாறு போற்றப்பெறல்.

சு. தமிழ்நாட்டு முப்பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா மண்டபத்தின் முன்பும், மறைமலையடிகள் வெண்கலப் படிமையேனும் சலவைக்கற் படிமையேனும் நிறுவப்பெறல்.

எ. இதுவரை அச்சிற்கு வராத உலகவழக்குத் தமிழ்ச் சொற்களெல்லாம் தொகுக்கப்பெறல்,

அ. குமரிநாட்டினின்று தொடங்கும் உண்மையான தமிழ்நாட்டு வரலாறு விரிவாக வரைந்து வெளியிடப்பெறல்.

கூ. குமரிநாட்டுத் தமிழே திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் என்னும் உண்மை தமிழரெல்லாராலும் அறியப் பெறல்.

க0. தமிழ்நாட்டுக்கோவில் வழிபாடு தமிழிலேயே நடைபெறல்.

கக. தமிழ் உலகவழக்குப் படிப்படியாகத் திருந்திவரல்.

கஉ. அரசியல் அலுவலகப் பெயர்ப் பலகைகளிலும் விளம்பரப் பலகைகளிலும் தமிழ்ச்சொற்றொடர்கள் புணர்ச்சியுடன் எழுதப் பெறல்.

கங. தமிழ்நாட்டு ஊர்களும் தமிழிலுள்ள பெயர்ப்பலகைகளும் தூய தமிழ்ச்சொற்களையே தாங்கல்.

கச. அயல்நாட்டுப் பல்கலைக் கழகங்களிலெல்லாம் தமிழுக்குப் பேராசிரியப் பதவி யேற்படல்.

கரு. கானு, பிரனீசுமலைநாடு முதலிய நாடுகட்கு ஆராய்ச்சியாளரை யனுப்பி, அங்கத்து மொழிகளிலுள்ள தமிழ்ச்சொற்களைத் தொகுப்பித்தல்.

கசு. இந்திய ஆட்சியின் இந்தித் தொடர்பு அடியோடு நீக்கப் பெறல்.

இவையெல்லாம் நிகழுங் காலமே தமிழாட்சிக் காலமாகும். ஒரு சில தமிழர்க்கு உயர்பதவி கிட்டியவுடன் தமிழாட்சி வந்ததாகக் கருதுவது அறியாமையின் பாற்பட்டதே.

தமிழாய்ந்த தமிழனே தமிழ்நாட்டு முதலமைச்சனுதல் வேண்டுமென்று புரட்சிப் பாவேந்தர் கொண்ட வேணவா இன்னும் நிறைவேறவில்லை. மறைமலையடிகள் வழிச்சென்று மாபெரும் பாடுபட்டுத் தமிழின் தூய்மையைக் காக்கும் ஒரேயொரு தொண்டனுக்கும் ஓர்

ஆராய்ச்சிப் பதவியளித்துதவ மனமின்றி, அக்வைமிகை யென்று தட்டிக்கழித்த ஒரு முதலமைச்சர் எங்ஙனம் தமிழாய்ந்த தமிழனு யிருக்க முடியும்? சிறந்த ஆராய்ச்சியாளனுக்கு மூப்பும் ஒரு தகுதி என்பதை, அவர் அறிந்திருந்தும் அறியாதவர்போல் நடித்தது மிக மிக இரங்கத் தக்கதே.

இனி, தண்டவாளத்தின்மேல் தலைவைப்பது மட்டும் தமிழ்ப் பற்றையோ தலைமைத் தகுதியையோ காட்டிவிடாது. வண்டிவராத வேளையும், நூற்றுக்கணக்கான நண்பர் அண்டிச் சூழ்ந்து நிற்கும் போதும், ஓட்டுநர் வண்டியை மேற்செலுத்தாரென்று திட்டமாய்த் தெரிந்த பின்பும், எவரும் தண்டவாளத்தின்மேல் தலையும் வைக்க லாம்; ஒரு தூக்கமுந் தூங்கலாம். மேலும், எடிசன், சர்ச்சில், மறை மலையடிகள், திங்கட்செலவினர் போன்ற புதுப்புனைவாளரும் ஆள் வினைத்தலைவரும் பேரறிஞரும் அருஞ்செயன்மறவரும், தண்டவாளத் தின்மேல் தலைவைப்பதுமில்லை; என்றேனும் வைக்கக் கருதுவது மில்லை. ஆதலால், சிறுவருஞ் செய்யக்கூடிய அச்சிறுசெயல் பெரி யோரின் பெருமைக்குச் சான்றாகாது. அறிவு, ஆராய்ச்சி, சொல் வன்மை, அன்பு, தொண்டு, நடுநிலை, குடிசெயல், தாளாண்மை, ஆள்வினைத்திறம், நறுகண்மை, ஈகைத்தன்மை, தன்மானம், பரந்த நோக்கு, பெருந்தன்மை முதலிய பண்பாட்டுக் குணங்களையே ஒருவர் பெருமைக்கும் தலைமைக்கும் சான்றாக எடுத்துக்காட்டல் வேண்டும்.

ஒரு நாடு முன்னேறுவதற்கு மொழியே வழியாம். தமிழ் தாழ்த் தப்பட்டதே தமிழன் தாழ்ந்ததற்கு கரணியம். தமிழன் உயர்வடைய வேண்டுமாயின், தமிழ் மீண்டும் குமரிநாட்டிற்போல் தழைத்தோங்க வேண்டும். தமிழ் என்பது தனித்தமிழே; திரைப்பட மொழியன்று. தமிழைப் போற்றாதவன் தமிழனல்லன். தமிழை அழிக்க விரும்புபவர் பேராயத்தார்போல் தாமே அழிந்து போவர். ஆதலால், தமிழ் மீண் டும் அரியணை யேறுவதுபற்றி ஐயுறவேண்டா. தி. க. விலிருந்து தி. மு. க. தோன்றியது போன்றே தி. மு. க. விலிருந்து நாளடை வில் த. த. க. (தனித்தமிழ்க் கழகம்) தோன்றும். அன்றே தமிழாட்சி தொடங்கி உலகுள்ளளவும் நிலைத்து நிற்கும்.

உலகத் தமிழ்க் கழகம் கையாளும் குறிக்கோட் பண்புகள் எண்மை (எளிமை, Simplicity), உண்மை (Sincerity) தன்னல மின்மை (Selflessness) தொண்டு (Service), ஈகம் (Sacrifice) என்னும் ஐந்தாகும்.

தொடர்ச்சி-4.

திருக்குறள் தமிழ் மரபுரைச் சிறப்பு

-பெருஞ்சித்திரன்.

பாவாணர் நூற்களைப் படித்தவர்களுக்கும், தென்மொழியைத் தொடர்ந்து படிப்பவர்களுக்கும் பொதுவாகவே ஒருண்மை விளங்கியிருத்தல் வேண்டும். தனித்தமிழ்க்கொள்கை ஆரியப் பார்ப்பனருக்கு எதிர்ப்பாகத் தோன்றியதன்று. தமிழையும் தமிழரையும் தமிழகத்தையும், ஆரியக்கலப்பினின்றும், அடிமைத்தனத்தினின்றும், வடநாட்டினின்றும், காப்பதும், மீட்பதும், விடுதலைபெறச் செய்வதுமே நமது தலையாய குறிக்கோள். இம் முக்குறிக்கோள்களை நோக்கியே பாவாணரும் அவரடியொட்டிச் செல்லும் நம் இயக்கமும் மெதுவாக, ஆனால் மிகவும் உறுதியாகச் சென்றுகொண்டுள்ளது. திருக்குறள் தமிழ் மரபுரை அந்நோக்கத்தின் ஒரு வெளிப்பாடே. என்றும் அழிவுறாத தமிழ் நூற்கள் யாவற்றினும் ஆரியரும் அவரடிவருடிகளும் தம்தம் கைவரிசைகளைக் காட்டத் தவறாதது போலவே, உலகப் பொதுமறையாம் இத்திருக்குறளிலும் அத் திருவிளையாடல்களை நடத்தியிருக்கின்றனர் என்பதை வேறு எந்த உரைகாரரினும் பாவாணர் தம் மரபுரையில் தெளிவுபடுத்தி யிருக்கின்றார். ஆரியத்தைத் தாக்க வேண்டும் என்பது அவர் நோக்கமன்று; தமிழகத்தை மீட்க வேண்டுமென்பதே அவர் நோக்கம். பரிமேலழகர்மேல் குறைசாற்றிப் பழித்தல் வேண்டும் என்பதவர் கருத்தன்று; திருக்குறளில் வலிந்து பூசப்பெற்ற கறையை அழித்தல் வேண்டுமென்பதே அவர்கருத்து. இக்கருத்தின் அடிப்படையில் செல்லும் அவர்தம் இயல்பான போக்கில், ஆரியம் சிக்குண்டு சிதைவதை இம்மரபுரை முழுவதும் காணலாம். இனி, ஒரோவோர் இடங்களில் ஆரியப் பார்ப்பனரை அவர் வலிந்து தாக்குவதாகச் சிலர் உரைப்பதற்கும் கரணியம் உண்டு. அஃது, அவர்கள் திருக்குறள் காலந்தொடங்கி இந்நாள்வரை தங்கள் இனப்பூசல்களைக் கைவிடாமல் தொடர்ந்து செய்து வருகின்றமையே ஆகும். அவ்வாறு அவர்கள் செய்து வருவனதாம் எவையென்பதைச் சற்று விளக்கமாகக் கூறினாலொழிய, அன்பர்களுக்குப் பாவாணரும் தென்மொழியும் அவர்கள்மேல் வீண்பழி கூறுவதாகவே தோன்றும்.

பொதுவாகவே பார்ப்பனர்கள் இனவுணர்வு மிக்கவர்கள். இதை அவர்களின் குணமாகவே கொண்டாலும், இவ் வினவுணர்வு பிற இனத்தைப் பகையாகவே கருதக்கூடிய அளவிற்குக் கரவும் வஞ்சமும்

சான்றது. இக் கரவினுக்கும் வஞ்சத்திற்கும் நேரடியாகவே நம்முள் ஒவ்வொருவரும் ஆட்பட்டால் ஒழிய, நாம் அவர்களை எக்காலத்தும் அத்தகைய தன்மையுடையவர்களாகக் கருதவே மாட்டோம். பழி வாங்குவதில் அவர்கள் யானையைப் போன்றவர்கள். நாம் எத்துணை யளவு உண்மையான நட்பு வைத்தாலும், உள்ளத்தால் நம்மைப் பகைவர்களாகவே கருதும் தன்மை அவர்களுக்கே உரியது. இக் கூற்று எந்த ஒரு தனிப்பட்ட ஒருவரின்மேலோ, ஒரு தனிப்பட்ட ஒருவருக்கு ஏற்பட்ட பட்டறிவினாலோ சொல்லப் பெறுவதன்று. பொதுவாகவே உலகிலுள்ள ஒவ்வோரினத்திற்கும் ஒவ்வொரு தன்மை உண்டு என்னும் இயற்கைத்தன்மையை அடியொட்டி, ஒருசில வரலாற்று நிகழ்ச்சிகளின் அடிப்படையில் கூறப்பெறுவதாகும். "தங்களைப் பாதுகாத்துக் கொள்வதிலும், ஏற்க விரும்பாத பிற இனத்தவரின் கருத்துகளை நெருங்கவிடாது தொலைவிலேயே வைத்திருப்பதிலும் பிராமணர்கள் வல்லவராயிருந்தனர்" என்று வரலாற்றாசிரியர் வின்சென்ட் சுமித் அவர்களின் தன்மையைக் குறிப்பர். இந்த நிலை இன்றுவரை ஆரியப் பார்ப்பனர்களாகிய பிராமணர்களை விட்டு நீங்கவில்லை என்பதைத் தம் தம் குடும்ப நிலைகளை விட்டு வெளிவந்து, பொதுநிலைகளில் ஈடுபட்ட எவராலும் உணராமல் இருக்கமுடியாது.

அரசியலிலும் சரி, குமுகாயவியலிலும் சரி, ஆரியப் பார்ப்பனர்களின் அளவிறந்த கேடுகள் தமிழக வரலாற்றையே அடியோடு மாற்றியமைத்துள்ளன. இந்திய நாடு முழுவதுமே அவர்களுக்குச் சொந்தம் என்பதுபோல் வரலாற்றையே மாற்றி எழுதி வைத்துக் கொள்ளும் பெருந்துணிவு அவர்களுக்கே கைவந்த ஒன்று. அவர்களின் வேதபுராணப், பழமைச் செய்திகளில் எல்லாம் இந்நாடு 'ஆரியவர்த்தம்' என்றும் 'பிராமண நாடு' என்றுமே பேசப்படுகின்றது. மிக அண்மையில் வாழ்ந்து மறைந்த பார்ப்பனப் பாவலரான பாரதியார் கூட இவ்விந்திய நாட்டை ஆரியநாடு என்று அழைப்பதிலேயே பெருமிதம் கொண்டிருந்தார். வடநாட்டுப் பகுதியில் சரசுவதியாற்றுப் படுகையில் அமைந்திருந்த ஒரு பகுதிக்குப் 'பிரம்மவர்த்தம்' என்றே பெயர் சூட்டப்பெற்றிருந்தது. "மகாத்மாவாகிய அந்தப் புரதனுடைய பரிசுத்தமான ராஜ்ய வியாபாரம், தேவர்க்குரியதும் தோல்வியடையாததும், ஜனங்களால் பெரிதும் சிலாகிக்கப்பட்டதுமாகப் பிரகாசத்துடன் நடந்துவந்தது. அவன் அரசர்களை வென்று தனக்குக் கீழ்ப்பட்டவர்களாகச் செய்தான். பராக்கிரமசாலியான

அந்த அரசன் எல்லாவற்றிற்கும் மேலான புகழையடைந்து பூமி முழுமைக்கும் சக்ரவர்த்தியாக இருந்தான்''—என்று மகாபாரதம் ஆதி பருவத்தில் கூறப்பெற்றிருக்கின்றது. ஆனால் வரலாற்றாசிரியர்கள் இவர்களின் கற்பனை நிறைந்த கட்டுக்கதைகளை எல்லாம் உடைத்துத் தகர்த்திருக்கின்றனர். வின்செண்ட் சுமித் இதை மிகவும் தெளிவாக மறுத்திருக்கின்றார். ''நாம் ஆராய்ந்துவரும் பண்பாட்டுக் காலத்திற்கும், பரந்த நிலப்பரப்பிற்கும் ஆரியருக்கும் எவ்வகைத்தொடர்பும் இல்லையென்றே கருதுகின்றேன். ஆரியமொழி பேசியவரின் தொடர்பு ஏதாவது காணப்படுமாயின் அது பண்பாட்டை அழிக்கும் முயற்சியாகவே இருக்கக்கூடும்'' என்பது அவரின் வலிந்த கருத்து. ஆனால் ஆரியப் பார்ப்பனர்கள் இன்றுவரை அவர்களின் வேத, புராண, இதிகாசங்களிற் கூறப்பட்ட, வரலாற்றுக்குச் சிறிதும் பொருந்திவராத கருத்துகளையே ஒப்புக்கொள்ளுகின்றார்களே யன்றி, நடுநிலையாளரும் நுண்ணிய ஆராய்ச்சிகளின் மேம்பட்டவருமாகிய ஆங்கிலேயரின் கூற்றுகளுக்குச் செவிமடுப்பதே இல்லை.

''இந்த நாடு அனாதிகாலந்தொட்டு ஆரியர்களின் நாடு இல்லை என்றால் இதற்கு 'ஆரியாவர்த்தம்' என்ற பெயரே ஏற்பட்டிருக்காது'' என்றும், ''ஐரோப்பிய வரலாற்று ஆசிரியர்கள் நம் நாட்டைப்பற்றி எழுதிய வரலாறு ஒருதலைப் போக்குடனே எழுதப்பட்டதால் அது முற்றிலும் நம்பிக்கைக்குரியதன்று'' என்றும், நாகபுரிப் பல்கலைக் கழக முன்னாள் மொழித்துறைப் பேராசிரியர் பி. கே. சாவளாபூர்க்கர் என்பவர் அண்மையில் எழுதிய கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார். இன்னும் இராசதானத்தில் உள்ள கீழ்த்திசை ஆராய்ச்சிக்கழக இயக்குநர் பர். பத்தேசிங் என்பார், 'ஆரிய இனம் என்ற சொல்லை மாக்சுமுல்லர் ஆங்கில மொழிக்கு 1853-இல் அறிமுகப்படுத்தினார். இது மிகவும் கேடானது'' என்று கூறி, ஆரிய இனத்தைப்புனிதமான பழக்கவழக்கங்களுக்குகந்த ஓர் இனமாக மடிகட்டிப் பேசுவதுடன் ''ஆர்யாயினி'' என்று வேதத்தில் போற்றப்படும் பெயர் கொண்ட தெய்வம் பண்டைத் தமிழ்க் குடிகளால் 'ஐயை' என்று கூறப்பட்டது'' என்று மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட்டுக் காட்டுகிறார். இன்னும் பர். சிரீதா பாசுக்கர வர்ணேகர் என்னும் வடவாரியப் பார்ப்பனர் ஒருவர் அண்மையில் ஒரு கட்டுரையில்,

''சமத்கிருத மொழியின்மீது மிக உயர்ந்த மதிப்பு;

"பிரஸ்தானத்திரயம்' எனப்படும் வேத, உபநிடத, பிரம்மசூத்திர நூல்களில் விவரிக்கப்பட்டுள்ள அத்வைத சித்தாந்தத்தில் முழு நம்பிக்கை;

"இராமாயணம், மகாபாரதம், பாகவதம் போன்ற அமரத்துவம் வாய்ந்த இலக்கியங்களிடம் ஆழ்ந்த பற்று;

"பத்ரீநாத், புரீ, துவாரகை, இராமேஸ்வரம் என்றபடி நான்கு நாமங்கள் விளங்கும் திருத்தலங்கள் மீதும், அயோத்தி, மதுராபுரி, காசி, காஞ்சி, அவந்தி (உஜ்ஜயினி), புரீ, துவாரகை எனப்படும் ஏழு திருத்தலங்கள் மீதும் மற்றும் இவைபோன்ற புனிதத் தலங்கள் மீதும் பக்தி;

"கங்கை, கோதாவரி முதலான புனித நதிகளைப் போற்றும் இயல்பு;

"பசுவைத் தாயாக வணங்கும் உள்ளம்;

"இராமர், கிருஷ்ணர், சிவாஜி, பிரதாப், குருகோவிந்தர், புத்தர் ஜினேஸ்வரர் (மகாவீரர்), சங்கரர் போன்ற பாரதப் பெருந்தகையோரிடம் பெருமதிப்பு;

"—இந்த அம்சங்கள்தாம் நமது தேசீய ஒருமைப் பாட்டின் அழிவற்ற பிடிமானம் என்று கருதப்பட முடியும்," — என்று

தம் இனத்திற்கே என்றும் அழியாத மனநிலை கொண்டும், இவ்விந்தியநாடு என்றைக்கும் பார்ப்பனர்களுக்கே அடிமைப்பட்டது என்ற செருக்கு கொண்டும் எழுதியிருக்கின்றார்.

இவ்வாறு அரசியலின் ஆட்சியதிகாரத்தில் பார்ப்பனர்கள் என்றென்றும் நிலையாக இருக்க வேண்டுமென்று கொண்ட தந்திரங்கள், சூழ்ச்சிகள் யாவும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தது போலவே இன்றும் இருப்பதைக் காண்கின்றோம். தங்களுக்குப் பிடிக்காத ஒரு நிலை அரசியலில் உருவாகுமானால், அந்தநிலை நாட்டிலுள்ள மற்ற இனத்து மக்களில் பெரும்பான்மை யோர்க்குப் பொருந்துவதாயிருந்தாலும், அதனை உடனே மாற்றிவிட வேண்டும் என்பதே அவர்களின் உள்நோக்கமாகும். அந்த மாற்றத்திற்காக அவர்கள் எவ்வகையான முயற்சியிலும் மறைமுகமாகவும், முடிந்தால் நேரடியாகவும் ஈடுபடத் தயங்கமாட்டார்கள் என்பது வரலாறு. அவர்களின் வேத, புராண, உபநிடதங்களிலும் கௌடில்யம், சுக்ரநீதி, காமாந்தகம் முதலிய மிகப் பழைய நூல்களிலும் பாரத, இராமாயண முதலிய இதிகாசங்களிலும் கூறப்பட்டிருக்கின்ற பகைவர்கள் எனப்படுவோ

ரெல்லாரும் பார்ப்பனர்களின் போக்குக்கு எதிராக இருந்தவர்களும், அரசர்கள் எனப்படுவோர் எல்லாரும் பிராமணர்களாகிய தேவர்களின் போக்குக்கு உடந்தையாக இருந்தவர்களுமே யாவர் என்பதை அவற்றை மேலோட்டமாகப் பார்ப்பவரும்கூட எளிதில் உணர்வர்.

மக்களில் பெரும்பான்மையோருக்கு நன்மை கிடைக்கவிருக்கின்றதா இல்லையா என்பதில் எந்தப் பார்ப்பனரும் கவலைப் படுவதில்லை. சிறுபான்மையராக உள்ள தங்கள் இனத்திற்கு நன்மை கிடைக்கின்றதா இல்லையா என்பதிலேயே என்றும் கண்ணும் கருத்துமாக இருப்பதே அவர்களின் இயற்கையான குணம். அண்மையில் தமிழகத்தில் பேராயக்கட்சியிடமிருந்து தி. மு. க. விடம் ஆட்சிமாறிய புதியதில், பார்ப்பனர்கள் நடந்துகொண்ட தன்மையையும், அவர்கள் தாங்கள் எதிர்பார்த்தபடி தங்களுக்கு உகந்தவர்களாக நடந்துகொள்ளவில்லை என்றறிந்த இக்காலை அவர்கள் நடந்து கொள்ளும் தன்மையையும் ஊன்றிப் பார்ப்பவர்களுக்கு, அரசியலில் அவர்களின் கரவான எண்ணங்களும் போக்கும் புரியாமல் போகா. பயன் விளைகின்றதோ இல்லையோ தங்களால் எந்தெந்த வகையில் முடியுமோ அந்தந்த வகையில் எல்லாம் முறையாக முயன்றோ, முடியாவிட்டால் ஏமாற்றியோ, அதுவும் இயலாதபொழுது அழித்தோ தங்கள் இனத்திற்கு மட்டும் நன்மை தேடிக்கொள்ளும் பெரிய தந்நலம் அவர்களின் பிறவிக்குணம். இதற்குப் பண்டைய வரலாற்றிலும், இக்கால வரலாற்றிலும் பல சான்றுகளைக் காட்ட முடியும். இத்தன்மை இவர்களைவிட்டு இன்னும் போகவில்லை.

அரசியலில் இவர்களுக்கென்று ஒரு தனிக்கட்சி என்றும் இருந்ததில்லை. இஃதொன்றே இவர்கள் வெளிப்படையாக இயங்கமாட்டார்கள் என்பதற்குத் தக்க சான்றாகும். குழு மனப்பான்மை இவர்களிடம் என்றுமே இல்லாததால், ஆளும் பொறுப்பில் உள்ள எவரிடமும் இவர்கள் தங்களுக்குத் தேவையான அளவு வெற்றியைத் தேடிக்கொள்ள முடிகிறது. இத்தன்மை பாராட்டக் கூடியதில்லையா என்று சிலர் கேட்கலாம்; நடுவுநிலை என்றும் சிலர் தருக்கமிடலாம். ஆனால் தன்னல உணர்வினடிப்படையில், ஓரினம் பிறிதோரினத்தாரின் அறியாமையைப் பயன்படுத்திக்கொண்டு, இன்னுஞ் சொன்னால் அவ்வினத்தை மேலும் மேலும் அடிமைப் படுத்தும் சூழ்ச்சிகளை உருவாக்கிக்கொண்டு, தான்மட்டும் பல வஞ்சக முறைகளினால் அரசியல் ஊதி

யங்களைப் பெரிதும் நுகர்ந்து கொண்டிருப்பது பாராட்டக் கூடி யதோ நடுவுநிலையோ ஆகாது. இடத்திற்குத் தக்கபடியும், ஆளுக்குத் தக்கபடியும் தங்களை உருமாற்றிக்கொண்டு, உள்ளெண்ணங்களால் மாறுபடாது, மக்கள் நலன்களைக் கொள்ளையடிக்கும் ஒரு கூட்டத்தை எந்தவகையிலும் பாராட்டிவிட முடியாது. அரசியல் போக்கில் இவ் வாரியப் பார்ப்பனர்களின் தன்மை இவ்வாறெனில், குமுகாய அள வில் இவர்கள் கொண்ட போலிப் புனைவுகளையும், ஏமாற்றுகளையும், இழிவான வழிமுறைகளையும் அளவிடவே முடியாது.

வேதக்கால ஆரியர்தம் கற்பனையில் முகிழ்த்த செய்திகள் அனைத் தையும் இவர்கள் இன்றும் போற்றிக் காப்பதுடன், இவர்கள் இனத் தின் கற்பனைப் பெருமைகளையும், சமயத்தொடர்பான செய்திகளையும் உண்மையென்றே மக்கள் அனைவரும் நம்பும்படி பேசியும் எழுதியும் வருகின்றனர். "அவர்களது அறிவிற் கெட்டியவரை வேதச்சடங்கு முறைகளைப் பின்பற்றுவதில் தங்கள் வாழ்நாளைக் கழித்து வருகின்ற னர். பிராமணரது செல்வாக்கு, ரிக்வேதம் உருப்பெற்றதும் தொடங்கி விட்டது. சாதிமுறைக்கும் இவ்வாறு வித்திடப்பட்டது" றுஎன் சுமித் கூறுகிறார். இவர்கள் இந்தியாவில் நுழைந்தபொழுது, வடதிராவிடர் களுக்கும் வேத ஆரியர்களுக்கும் நடந்த பெரும்போர்களை அடி யொட்டி எழுதப்பெற்ற கற்பனைக் கதைகளான பாரத, இராமாயணப் பழங்கதைகளை, இவர்கள் இன்றும் உண்மையென்றே நம்பியும், நம்ப வைத்தும், அவற்றின் மூடக்கொள்கைகளால் மக்களை ஏமாற்றி வரு வதையும் எந்த அறிஞனும் பொறுத்துக்கொள்ள மாட்டான். வலிமை வாய்ந்த மாபெரும் தமிழவரசன் இராவணனை இவர்கள் இன்றும் அசு ரன் என்றும் இராக்கதன் என்றும் பழித்துரைப்பதுடன், அவன் ஆரிய இராமனின் மனைவியாகிய சீதையைக் கவர்ந்ததனால் அடைந்த தீமைகளையும், அவளை மீட்டுக் கொணர்ந்த இராமனின் அருமை பெருமைகளையும் உண்மையில் நடந்த வரலாறு போலவே இன்றும் பலவாறு எழுதியும் பரப்பியும், அக்கதைகள் தொடர்பான திருவிழாக் களைக் கொண்டாடியும் வருவது, அவர்கள் உள்ளத்தில் தமிழ் இனத் தின் மேலுள்ள வெறுப்பு எந்த அளவினது என்பதை அளந்தறிவ தற்கொரு கருவியாகும். மேலைநாட்டு ஆராய்ச்சியாளர் பலரும், இவ் விரண்டு பெரும் இதிகாசக் கதைகளும், 'ட்ராய்' நகர முற்றுகையைப் பற்றிய நினைவுகொண்டு, 'இலியட்' என்ற நூலின் ஆசிரியர் கற் பனை செய்தது போலவே, எழுதப்பெற்ற கட்டுக்கதைகள் என்பதைத் தெள்ளத்தெளிவாக அறிவித்தும், ஆரியப் பார்ப்பனரில் மிகப்படித்த

வரும், ஆட்சியதிகாரங்களில் உள்ளவரும் அவற்றில் கூறப்பட்ட செய்திகளை உண்மைச் செய்திகளாகவே நம்பியும் கொண்டாடியும் வருகின்றனர் எனில், அவர்கள் தங்கள் இனத்தின்மேல் பிறர் கொண்ட கசப்பான நினைவுகளை என்றும் அவர்கள் மறந்துபோகாத வாறு கட்டிக் காத்துவருகின்றனர் என்று பொருள்செய்து கொள்வதைத் தவிர வேறு எவ்வாறு கருதமுடியும்? "ஐரோப்பியர் எந்தக் கதைகளைப் 'புராணக் கதைகள்' எனக் கருதுகின்றனரோ, அவற்றை வரலாற்று உண்மைகளாகவே இவர்கள் கருதி வருகின்றனர்" —என்று விண்டர் நீட்சு என்னும் வரலாற்றாசிரியர் குறிப்பிடுகின்றார். "நுணுக்கமான ஆராய்ச்சி செய்யின் இச்செய்தி பயனற்றுவிடும்" என்பது சுமித் கருத்து. இந்திய அரசினர் விடும் பொதுவிடுமுறைகளில் 75 விழுக்காடு இக்கற்பனைக் கதைகளில் வரும் நிகழ்ச்சிகள் பற்றியனவே எனில், இதைவிட ஓர் அரசுக்கு வெட்கக்கேடான செய்திவேறு இருக்க முடியுமா? ஓர் இனத்தை உயர்த்திப் பிற இனங்களைத் தாழ்த்துவதற்காகவே எழுதப்பெற்ற புராணக் கதைகளில் ஒரு மக்களரசு இவ்வளவு கவனம் செலுத்துமானால், மறைக்கப்பெற்ற மாபெரும் வரலாற்றையும், சிதைக்கப்பெற்ற ஒப்புயர்வற்ற மொழியையும் கொண்ட ஒரு மக்கள் தொகுதி தன் இன முன்னேற்றத்தை விரும்புவதில் என்ன தவறு இருக்க முடியும்?

தங்கள் கதையளப்புகளையும், இனப் பித்தலாட்டங்களையும் பரப்புவதற்கென்றே ஆரியப் பார்ப்பனர்களுக்கு இருக்கும் வாய்ப்புகள் ஒன்றிரண்டா? எவ்வளவு பெரிய உண்மைகளையும் எளிதில் மூடி மறைக்கும் அரசுச் சார்பான வெளியீடுகளும் விளம்பரத்துறைகளும், தங்களின் கற்பனைச் சமயமான 'இந்துச்' சமயத்தையும் அது தொடர்பான மூடநம்பிக்கைகளையும் காலையிலிருந்து மாலைவரை தங்கள் விருப்பம்போல் பரப்பி, இவ்வளவு அறிவியல் மேம்பாட்டுக் காலத்திலும் ஒருசிறிதும் அறிவுபெற வாய்ப்பில்லாது மக்களைப் பண்டைப் பழமைச் சகதிகளிலேயே கொண்டு புதைக்கும் வாய்ப்பும் எவ்வளவு! எவ்வளவு!! இந்தநிலை தொடர்ந்து இருக்க ஒருபுறம் வழிவகுத்துக் கொண்டே, ஒருபுறம் ஆரியப் பார்ப்பனர்க்குப் பரிந்துகொண்டு வருபவர்கள், ஒன்றால் மூளைகெட்ட முழு மடயர்களாக இருக்க வேண்டும்; அன்றால் இனத்தைக் காட்டிக்கொடுத்து எச்சிலுக்கலையும் இழிந்த பிறவிகளாக இருத்தல் வேண்டும். ஆரியப் பார்ப்பான் தன் இனத்தின் பெயரால் பெருமையுடன் அணிந்திருக்கும் ஒருகாசு விலை

பெறுத பூணூலையும் அறுத்தெறிய மறுப்புத் தெரிவிப்பானுயின், அவனுடனும் அவன் இனத்துடனும் ஒட்டிப்போய் வாழ்க்கை நடத்தித் தன்னை இழிந்த பிறவி என்று முத்திரை குத்திக்கொள்ள இனவுணர்வுள்ள எந்தத் தமிழனும் முன்வரமாட்டான். ஒருவேளை அவன் இனத்துக்குப்பிறந்த இழிமக்கள் சிலர் வரலாம். சோற்றுக்குச் சுரணையிழந்தவர்கள் அன்றும் இருந்தனர்; இன்றும் இருக்கின்றனர். என்றைக்கும் அவர்கள் கணக்கில் சேர்ந்தவர்களல்லர்.

இத்தகைய எண்ணத் தொகுப்புகளின் அடிப்படையிலும், மறைக்கப்பெற்ற தமிழ் வரலாற்றை வெளிக்கொணரும் முயற்சியிலும், ஒப்புயர்வற்ற ஓர் இனத்தின் மூல எழுச்சியான ஒரு நூலின் இனப்புரட்சியை எடுத்துக்காட்டும் வகையிலும், எழுதப்பெற்றதே பாவாணரின் திருக்குறள் தமிழ் மரபுரையாகும்-என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. (தொடரும்)

மொழிப்பேரறிஞர். தேவநேயப் பாவாணரின்

திருக்குறள் தமிழ் மரபுரை

விலை உரு. 15-00

கிடைக்குமிடம்- திரு. தே. மணி,
ஆ-1135, இரண்டாம் மேற்குக் குறுக்குச்சாலை,
காட்டுப்பாடி விரிவு (வ. ஆ.)

பாவலர். பெருஞ்சித்திரனாரின்

அரிய தமிழ் நூல்கள்

			உரு. காசு.
1.	பாவியக்கொத்து	விலை	2 — 50
2.	எண்சுவை எண்பது	,,	1 — 50
3.	புரட்சிப்பாவலர் பாரதிதாசன்	,,	0 — 50

அஞ்சற் செலவு தனி

கிடைக்குமிடம்:- தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

நூறாசிரியம்

துரை-மாணிக்கம்.

பாட்டு-௨௨.

மலர்மிசை நாற்றம்போல் மதிமிசை யொளிபோல்
நலங்கிளர் கள்ளுள் இளவெறி நசைபோல்
தழலினுள் தெறல்போல் தணிப்பரிதாம் விறல்வேட்கை
எழுந்தது மறிகிலன்; படர்ந்தது முணர்கிலன்
மடுத்தலை கொணர்நீர் வேண்டி
எடுத்ததோட் கள்வன் எதிர்ந்த ஞான்றே!

பொழிப்பு:

மலர்ந்தவிடத்து வந்துதங்கும் மணத்தைப் போலும், எழுகின்ற நிலவின்பால் நிறைந்து விளங்கும் ஒளியைப்போலும், உடல் நலத்தைக் கிளர்விக்கும் கள்ளினுள் வேட்கையை மூட்டுவிக்கும் மெல்லிய வெறியைப்போலும், எரிகின்ற தணலுள் தோன்றி விளங்கும் சூட்டைப்போலும், அடக்குதற்கரிதாகிய இவ் வெற்றி கொள்ளும் காதல் விருப்பம் என்பால் திடுமென்று எழுந்து நின்றதையும் அறிந்திலேன்; என் உடலும் உள்ளமும் பற்றிப் பரவி நின்றதையும் உணர்ந்திலேன்; நீர் தேங்கிய மடுவினிடத்தே யான் கொணர்ந்த நீரை விடாய்க்கென வேண்டிக் கேட்க, எடுத்த தோள்களையுடையனும் என் நெஞ்சு கொண்ட கள்வன், என்முன் வந்து நின்ற அப்பொழுதே!

விரிப்பு:

இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது.

தனக்குரிய தலைவனைக் கண்டமட்டிலேயே தன் உள்ளம் மலர்ந்து நின்றதையும், உடல் ஒளிபெற்றுப் பொன்போற் பசந்ததையும், மெல்லிதாய காதலுணர்வு மேனி முழுதும் பரவி நின்றதையும், மெய் சூடேறியதையும் தலைவி தன் தோழிக்குக் கூறி இஃது இயற்கை வழி பொருந்திய காதல் ஆகலின் இதன் பிரிவை யான் ஆற்றுதற்கல்லேன் என்று தன் ஆற்றாமையைப் புலப்படுத்துவதாகும் இப் பாட்டு.

மலர்மிசை நாற்றம்போல்: முகையவிழ்ந்து மலர்ந்த மலரிடத்து வந்து பொருந்துகின்ற மணம்போல், முகையாயிருந்தபொழுது தோன்ருதிருந்து முழுமலர்ச்சி யெய்திய பொழுது கமழ்தலுறும் மலரின் மணம்போல், தலைவனைக் காணுவிடத்து அடங்கியிருந்து அவனைக் கண்டவிடத்து உள்ளத்தே மணம் பரப்பியதாம் அக்காதல் எனக் கூறினுள்.

மலருக்கு மணம்போல் மங்கையர்க்குக் காதல் என்ருள் என்க. இது தானறியாது நிகழ்ந்தது பற்றி இயற்கையால் நேர்ந்ததென்ருள்.

மதி மிசை ஒளிபோல்: மதி தோன்றுகின்ற பொழுது மழுங்கியிருந்து பின் ஒளி நிறைந்து விளங்குதல் போல், தன்னுளத்தும் முன்பு மழுக்கமுற்றிருந்து, தலைவனைக் கண்டவிடத்துக் காதல் என்னும் ஒளி நிறைவுற்றதென்ருள்.

கதிரவனுல் நிலவு ஒளிபெறுதல்போல் தலைவனுல் தானும் ஒளி பெற்றதை ஈண்டு விளக்கினுள் என்க.

நலங்கிளர் கள்: உடல் நலத்தைக் கிளர்விக்கும் கள். அளவின் உண்பார்க்குக் கள் உடல் நலத்தைத் தோற்றுவிப்பதுபோல், முறையின் கொள்வார்க்குக் காதல் உடல் நலத்தைக் கொடுக்கும் என்னும் உடலியலை ஓர்க.

இளவெறி நசைபோல்: கள்ளினுல் தோற்றுவிக்கப் பெறும் முருகிய வெறிபோலன்றிக் காதலால் மெல்லிய வெறி தோன்றினதென்ருள். நசை யென்றது மேலும் மேலும் கொள்ளுகின்ற விருப்பத்தை. அது கள்ளுண்பார் மேன்மேலும்கொள்ளுகின்றவிருப்பத்தைப் போன்றது. இது தலைவனுல் எழுப்பப் பெற்ற காதல் என்னும் மெல்லிய வேட்கையை மேலும் மேலும் தான் விரும்பினுள் என்றபடி அவனை மறக்க வியலாத தன் நிலையைக் குறிப்பால் கூறினுள் என்க.

தழலினுள் தெறல்போல்: மூட்டப்பெறும் தீயினுள் வந்து பொருந்தும் சூடுபோல், கொளுத்தப்பெற்ற காதலால் தன் உடலும் ஒருவகைச் சூடு பாய்ச்சப்பெற்றதென்ருள். அது தலைவனை மீண்டும் கூடிய விடத்தன்றி அடங்காதென்றும் குறிப்பை யுணர்த்தினுள் என்க.

தணிப்பரிதாம்: தலைவனுலன்றிப் பிறரால் தணிப்பதற்கரியதாம். அவன் பிரிவின்கண் சூடும்பால் பரந்து நின்று, அவன் கூடுங்கண் தண்ணெனக் குளிர்கின்ற தன்மை யுடையது காதல் என்னும் திறமுரைத்தாள் என்க.

விறல் வேட்கை: வெற்றிகொண்ட வேட்கை. கன்னியர்க்கு எழும் பிற வேட்கை யெல்லாம் அவற்றிற்குக் காரணியமானவற்றைப் பெற்ற விடத்து அடங்கி நிற்பதும் காதல்மட்டும் அதற்குக் காரணிய மான தலைவனைப் பெற்றவிடத்தும் அடங்காமல் மேன்மேலும் மிகுந்து நிற்பதும் உணர்த்தப்பெற்றது. பிற வேட்கையெல்லாம் ஒரோவொரு கால் தோல்வி யுறுவதும் காதல் ஒன்றே, தோல்வியுறுது தன்னையும் தான் கொண்ட பிற விருப்பங்களையும் வெற்றி கொள்வதும் ஆகை யால் விறல் வேட்கை என்றாள். விறல்–வெற்றி. தான் பற்றியவிடத் துப் பிற பற்றுகளைப் பற்றவிடாத தன்மை பற்றிக் காதல் வெற்றி பெற்ற தென்றாள். வெற்றிபெற்றது பற்றி அதன் ஆளுகைக்குத்தான் அடங்கினது இயற்கையே என்றாள்.

மலர்போல் மணம்பரப்பி, மதிபோல் ஒளி நிரப்பிக் கள்போல் இளவெறி மூட்டித், தழல்போல் காய்தலுற்றுப் பிறர் எவராலும் தணிக்கவியலாத ஓங்கிய தன்மையால் காதலது வெற்றியும் ஆட்சி யும் விளக்கப்பெற்றன.

எழுந்ததும்: எழுச்சியுற்றதும், அடங்கியிருந்த காதலுணர்வு தலைவனால் எழுப்பப் பெற்றதை உணர்த்தினாள் என்க.

மலர் விரிய விரிய மணம் எழுவதும், மதி எழ எழ ஒளி எழுவ தும், கள் உண்ண உண்ண வெறி எழுவதும், தீ அடர அடர வெப் பம் எழுவதும் இயற்கையேபோல் தோன்றிய அவன் நெருங்க நெருங்கக் காதல் எழுவதும் இயற்கையே என்றாள். அவை தடுத்தற் கியலாமைபோல் இதுவும் தடுத்தற்கியலாமையாம் என்றாள்.

அறிகிலன்: அறிந்தேனல்லன். அறிகின்ற பொறிகளைப் புறத்தேதான் பெற்றிருந்தும், புறத்திருந்து காட்சிப் பொருளாய் வந்த தலைவனொடு வந்த காதலைத் தான் அறிய வியலாது போயிற் றென்றாள். பொறியுணர்வால் அறிகின்ற தன்மை பற்றி அறியேன் என்றாள். என்னை? தலைவனைக் கண்களாற் கண்டதும் அவன் மொழி களைச் செவிகளாற் கேட்டதும் தான் அறிந்திருந்தும், அவன் எழுப்பு வித்த காதல் உணர்வு அக் காட்சியாலும் கேள்வியாலும் அறியக் கூடாததாயிற்று; உள்ளிருந்தே எழுந்து உள்ளத்தைப் பற்றியதாக லின் புறத்தே அறிகிலன் என்றாள் என்க.

படர்ந்ததும்: பரவிப் படர்ந்ததும்; அளாவி நின்றதும். எழுச் சிக்குப்பின் அவ்வுணர்வு உடல் முழுதும் பரவி நின்றதைக் கூறினாள்.

மலர் விரிதலுறும் பொழுதே மணமும், மதி எழலுறும் பொழுதே ஒளியும், கள் அருந்தலுறும் பொழுதே வெறியும், தழல் கொளுத்த லுறும் பொழுதே சூடும் எங்ஙன் அவ்வவற்றிற் படர்ந்து தோன்று கின்றனவோ, அங்ஙனே அவனைக் காண்டலுறும்பொழுதே காத லுணர்வும் எழுந்து தன் உள்ளத்தும் உடலுள்ளும் உயிருள்ளும் படர்ந்து தோன்றியதென்றாள்.

உணர்கிலன்- உணர்வெழுச்சிக்குக் கரணியனான தலைவனைத் தான் அறிந்தும் அவனால்எழுப்பப்பெற்ற உணர்வைஅறியாதுபோன தால் அறிகிலன் என்றவள். அஃது அகத்தே ஊடுருவி அளாவிப் படர்ந்த தன்மையை உணர்கிலன் என்றாள். பொறியறிவுக்குப் படும் அளவில் புறத்தே பருப்பொருளாய் நின்ற பொழுதே அறியாதவள், உணர்வுக்குப் படும் அளவில் அகத்தே நுண் பொருளாய் நின்றதை உணரக்கூடுமோ என்று இயல்புணர்த்தினாள் என்க.

புறத்தே பருப்பொருளாய் நின்றதென்றது காட்சிக்கும் கேள்விக்கும் பிற பொறியறிவிற்கும் பொருளாகி நின்ற தலைவனை என்க. நுண்பொருளாய் நின்றதென்றது அத் தலைவனாகிய பருப் பொருளினின் றெழுந்து வந்து உயிரொடு அளாவிப் பிணைந்த அன் புணர்வினை என்க.

மலர் புறத்தே பருவாயும், அதனின்றெழும் மணம் நம்மை அளாவுமிடத்து அருவாயும், மதிபுறத்தே பருவாயும், அதனின்றெழும் ஒளி நம்மை அணுகுமிடத்து அருவாயும், கள் புறத்தே பருவாயும் அதனின்றெழும் வெறி நம்மிற் கலக்குமிடத்தே அருவாயும், தீ புறத்தே பருவாயும் நம்மைத் தெறுமிடத்து அருவாயும் நிற்றல்போல், தலைவன் புறத்தே பருவாயும் அவனின்றெழுந்த அன்புணர்வு அருவா யும் நிற்றல்பற்றி முன்னதை அறிவதும், பின்னதை உணர்வதும் என வேறுபடுத்திக் கூறினாள் என்க.

மடுத்தலை—மடுவினிடத்தே.

கொணர்நீர்—கொணர்ந்த நீர்.

கொணர்தலென்பது கொண்டுவரல் என்பதினின்று வேறு பட் டது. கொண்டுவருதல் என்பது ஈரிணைப்பொருசொல்லாயினும் வருங்கால் கையோடு எடுத்துவரல் என்னும் பொருளது. கொணர்தல் என்பது இங்கிருந்துபோய் எடுத்து வருதல் என்னும் பொருளது.

இஃது ஆங்கிலத்தில் உள்ள Bring, Fetch என்னும் இரு சொற்களைப் போன்றது.

வேண்டி: விரும்பி. மடுவினின்று கொணரும் நீரை அருந்த விரும்பி.

தலைவியொடு உரையாட விரும்பிய தலைவன் அவள் கொணரும் நீர்வேட்டு நின்றான் என்க.

எடுத்த தோள்: திரண்டு எழுந்த தோள்.

கள்வன்: நெஞ்சைத் திருடிய தலைவன்.

எதிர்ந்த ஞான்றே!. எதிர் வந்து நின்றபொழுதே!

'தலைவன் நீர் வேட்கையுற்று எதிர்வந்து நின்றபொழுதே தன்னுள்ளத்து மலருள் மணம்போலும் மதிக்கண் ஒளிபோலும் கள்ளுள் வெறிபோலும், தழலுள் தெறல் போலும், உளத்துள் காதல் எழுந்து படர்ந்தது. அதனை யான், அறியவும் அறிகிலேன்; உணரவும் உணர்கிலேன் என்று அவனைப் பிரிதலுற்ற தலைவி, தோழியிடம் தன் ஆற்றாமையைப் புலப்படுத்தினாள் என்க.

இது குறிஞ்சி யென் திணையும், பிரிவிடை யாற்றாத தலைவி தோழிக்கு உரைத்தது என் துறையுமாம்.

தென்மொழி கடலூர்-1.

தனித்தமிழில்வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	9 உருபா.	10-50 உருபா	13 உருபா.
அரையாண்டுக் கட்டணம்	5 உருபா.	6 உருபா.	7 உருபா.
தனி இதழ்:	75 காசு.	90 காசு.	1 உருபா.

ஓரிதழுக்கு ஓர் உருபா 50 காசு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

"அச்சாகும் நூலெல்லாம் நூலாமோ? ஆங்குசிலர்
மெச்சியுரை செய்வதனுல் மேலாமோ—முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோருய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு!"

தமிழ் இலக்கியச் சோலை

ஆசிரியர்: பேராசிரியர். வ. பெருமாள்.

வெளியீடு: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4.

விலை: உரு. 2-25.

'அறிவு' முதல் 'உடல்நலம்' ஈருன பன்னிரண்டு கட்டுரைகளின் தொகுப்பாக அமைந்துள்ள இந்நூல் ஓர் இலக்கிய ஆய்வு நுழை முகமாக விளங்குகின்றது. திருக்குறள், சிலப்பதிகாரம், திருவருட்பா முதலிய நூல்களிலும், முதுமொழிகளிலும், பாவியல், வணிகவியல், கணக்கியல், அறிவியல், உடலியல் முதலிய துறைகளிலும் ஆசிரியர் உள்நுழைந்தும் புறநின்றும் தங்கருத்துகளைச் சுட்டிச் செல்லுகின்ருர்.

இலக்கியத் துறையைச் சார்ந்தனவென இக்கால் வெளிவரும் பெரும்பாலான நூல்களைப் போன்றே இந்நூலும் இடையிடையே குறைகளும் பிழைகளும் மிடையப் பெற்றிருக்கின்றது.

பேராண்மை என்பதற்குப் பிறன்மனை நோக்காமை என்று திருவள்ளுவர் வரையறுத்திருப்பதாகக் குறிப்பிடுகின்ருர். (பக்-18) அவ்விடத்தில் "பேராண்மை என்ப தறுகண்" என்னும் திருக்குறளைச் சுட்டியிருப்பின் சிறப்பாயிருக்கும். மேலும்

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்னும் திருக்குறள் 'பிறர் நன்மைக்காகப் பொய் கூறலாம்' என்று கூறுவதாகக் கூறுவது (பக்-19) நிறைவுடைத்தன்று. அக் குறளில் பொதிந்துள்ள பொருளை ஆழ்ந்து நோக்குதல் வேண்டும். பண்டைத் தமிழக வணிகவியலை ஆராயப் புகுந்தவிடத்துச் சுப்பிரமணிய பாரதியின் பாடலை மேற்கோளாகக் காட்டியிருப்பது கட்டுரையின் தரத்தையும் ஆசிரியர் தரத்தையும் சற்றுக் குறைத்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

"உள்ளதை உள்ளவாறே சொல்லுதல், மிகைபடச் சொல்லுதல், குறைத்துச் சொல்லுதல் ஆகியவற்றை முறையே மெய்கூறல், புகழ் கூறல், பழிகூறல் என்று கூறுவர்" என்று (பக்-86) கூறுவதும் ஏற்புடைத்தன்று. புகழும் பழியும் இயன்மொழி யாயவிடத்து அவற்றை மெய்கூறலென்றே யுரைத்தல் அமையாமையின், குறி யீடு வேறுபாடு நோக்கிப் புகழ்ந்து கூறல், பழித்துக்கூறல் என்று சுட்டுதல் சிறப்பாமென்று கடைப்பிடிக்க!

'முக்கலையாவன ஆடல், பாடல், அழகு' என்றும் (பக்-90) 'முச் சுவையாவன இன்பம், அவலம், வீரம் என்றும் (பக்-91) 'இறைவன் இயற்றமிழில் உண்மையாயும், இசைத்தமிழில் அறிவாயும், நாடகத் தமிழில் இன்பமாயும் விளங்குகின்றான்' என்றும் (பக்-92) கூறுவன செயற்கை யமைப்பாகவே உள்ளன. முக்கலைக்குக் காட்டும் மேற் கோள், மேற்கோள் மலைவேயன்றி வேறில்லை.

இராமலிங்க அடிகளின் சமயம் சன்மார்க்கம் என்று ஒன்று கூறினார். (பக்-118) அவ்வடிகள் பின்பற்றியது தொன்மைச் சிவ நெறியேயா மென்றும், சன்மார்க்கமெனத் தனித்தொரு மதமில்லை யென்றும். அங்ஙனங் குறிக்கப்பெறுவதும் சிவநெறிக்குப் புறம்பான தன்று என்றும் அறிதல் வேண்டும்.

தாமரை, ஆம்பல், வெள்ளம் என்பன பேரெண்களைக் குறிக்கும் தொல்வழக்கும் நல்வழக்குமாயிருக்க, அதன் கண்ணுள்ள தாமரை என்பதைக் கமலம் என்று மாற்றி யெழுதியுள்ளது (பக்-126) கைவிடத் தக்கதும் கண்டிக்கத் தக்கதும் ஆகும்.

'நாராய் நாராய்' என்னும் தனியன் இப்பொழுது பெருவழக்கா யுள்ள பாடத்தொடு நிரம்ப வேறுபடுகின்றது; சிறப்புமில்லை. பழம்படு பனையின் என்பது பனம்படு பனையின் என்றிருப்பதில் பொருளமைவும் இல்லை. பாடவேறுபாடாயின் அதனை மேற்கோளுடன் சுட்டிக்காட்டியிருத்தல் வேண்டும்.

அனுபவம், ஆபரணம், நிபந்தனை, விபரம், சுகாதாரம், சிகிச்சை முதலிய பலப்பல பிறமொழிச் சொற்கள் அருவருக்கத்தக்க வகையில் ஆங்காங்கு விரவியுள்ளன. 'வாய்ந்தது' என்னும் சொல் பொருளே மாறுபட 'மாய்ந்தது' என (பக்-101) அச்சாகியுள்ளது. மேலும் ரோம், ரோமர் (பக்-76) முதலிய சொல்வடிவப் பிழையும் காணப் பெறுகின்றன.

இலக்கிய இன்பம் நுகரவும் புத்திலக்கியம் படைக்கவும் இலக்கிய ஆய்வு நூல்கள் இன்றியமையாதனவாம். அவ்வகையில் இந்நூல் வரவேற்கத் தக்கதே. இனியேனும் ஆசிரியர் பிழை நீக்கலைப் போற்று வாராக!

—இறைக்குருவன்.

கொசு எப்படிக் கடிக்கிறது?

கொசு எப்படிக் கடிக்கிறது? நெடுங் காலமாக ஆராய்ச்சி யாளர்க்கு இதுபற்றிய தெளிவான கருத்து கிடையாது. ஆனால் இப் பொழுது சிகாகோ உயிர்வேதியலார் (Biochemist). ஒருவர் கடிக் குறிப்புமானி (Bitometer) என்ற ஒரு மின்பொறியை அமைத்திருக் கிறார். இக் கருவியைக்கொண்டு கொசு எப்பொழுது, எப்படிக் கடிக் கின்றது என்பதைத் துல்லியமாக அளக்க முடியும்

அமெரிக்காவிலுள்ள பூச்சி இயைபு நூல் தாளிகை (Journal of Insect Physiology)யின் மார்ச்சு மாதவெளியீட்டில் இதைப்பற்றிய விளக்கம் காணப்படுகின்றது. இவ்வாராய்ச்சியின் பயனாக எப்படிக் கொசு நச்சுக்காய்ச்சலைப் (Malaria) பரப்புகிறது என்பதைப் பற்றிய புதிய விளக்கம் கிடைக்கிறது.

உலகில் ஆயிரம் இலக்கம் மக்கள் நச்சுக்காய்ச்சலினால் தாக்கப் படுகிறார்கள். சென்ற ஆண்டில் மட்டும் பத்திலக்கம் மக்கள் இந் நோயினாலிறந்திருக்கிறார்கள். உலக நலத்துறை யமைப்பு (W.H.O.) இந்நோயை, ''மாந்த உடல் நலத்தின் மிகப்பெரும் இடையூறு'' என்று குறிப்பிடுகிறது.

அரசினர் தொழிற்சாலைகளி னுதவியால் நடைபெற்று வரும் ஐ. ஐ. டி. ஆராய்ச்சி நிறுவனத்திற் பணியாற்றிவரும் திரு. பிலிப் காசின் என்பவர் இக் கடிக்குறிப்பு மானியைக் கண்டுபிடித்திருக் கிறார். அமெரிக்கப்படை மருத்துவ ஆராய்ச்சித் துறையினர் இவ் வாராய்ச்சிக்குப் பொருளுதவி செய்தனர்.

கொசுத் தாக்குதலின் ஒவ்வொரு நிலையையும் இம் மின்பொறி கண்டுபிடித்து அளக்கிறது. இதற்குமுன் கொசுவின் உணவுப் பழக்கத்தை உற்றுநோக்குவதன்வழிக் கிடைக்கும் செய்திகளோடு பொந்திகைப் (திருப்தி) பட்டுக்கொள்ள வேண்டியிருந்தது. கொசு இரையின் குருதியை உறிஞ்சி நிரப்பிக்கொள்கிறது என்பதற்குமேல் எதுவுந் தெரியாது.

கடிக்குறிப்புமானியின் அமைப்பு: கொசுக்கள் நிரம்பிய கண் ணாடித்தாழி; அதன்மீது ஒரு வெண்கலத்தாலாய வலைத்திரை; இத் திரைக்கு மின்னிணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுதான் கடிக் குறிப்புமானி.

வலைத்திரையின்மேல் ஒரு மயக்கமூட்டப்பட்ட எலி வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வெலியும் திரையும் ஒரு மின் சுற்றுடன் இணைக்கப்பட்டுள்ளன. இச்சுற்றிற் பாயும் மின்சாரத்தை யளக்க ஒரு பொறியும் இச்சுற்றோடு இணைக்கப்பட்டுள்ளது. கொசு எலியைக்கடித்தாலொழிய மின்சுற்றில் மின்சாரம் பாயாது. ஏனெனில் எலியுடலிலுள்ள மயிர் மின்காப்பாக (Insulator) அமைகிறது.

ஒரு கொசு எலியைக் கடிக்க வேண்டுமென்றால் வெண்கல வலைத்திரையைக் கால்களாற் பற்றித் தொங்கவேண்டும். பிறகு அதன் கூர்மையான குழல்வாய் எலியின் மயிர்களைத் தாண்டி அதன் தோலைத்தொளைக்குமல்லவா? எலிக்கும் திரைக்குமிடையே உள்ள மின் சுற்று முழுமைபெற்று மின்சாரம் பாய்கிறது. (மின்சாரம் பாயும்வழி: எலி - கொசு–வலைத்திரை). இப்பொழுதுண்டாகும் மின்சாரம் மிகமிகக் குறைவு–ஒரு வோல்ட்டில் ஆயிரத்திலொரு பங்குக்கும் குறைவு– எனவே எலிக்கோ கொசுவுக்கோ எவ்விதத் தீங்கும் ஏற்படாது.

கொசு கடித்தவுடன் பாயும் சிறிதளவு மின்சாரம் மின் பதிவுக் கருவியில் பதியப்படுகிறது கொசு தொடர்ந்து எலியின் உடலைத் தொளைப்பதில்லை. பலமுறை தனது குழல்வாயை எலியின் தோலில் நுழைக்கவும் எடுக்கவும் செய்கிறது. இவற்றையெல்லாம் மின்பதிவுக் கருவி தெளிவாகக் குறித்துக் கொள்கிறது.

மூன்று நிலைகள்:

1. எலித்தோலில் குழல்வாயைத் தொளைத்தல்.
2. உமிழ்நீரைச் செலுத்துதல்.
3. குருதியை உறிஞ்சுதல்.

உமிழ்நீர் உமிழப்படும் பொழுது சிறிதளவு மிகுதியான மின் சாரம் பாய்கிறது. ஏனெனில் உமிழ்நீர் ஒரு மின்கடத்தியாக வேலை செய்கிறது. உறிஞ்சுதல் அல்லது உட்கொள்ளுதலின் பொழுது இன்னும் மிகுதியான மின்சாரம் பாய்கிறது. ஏனெனில் இரையினுடலிலிருந்து பாயுங் குருதி உமிழ்நீரைவிட விரைவான மின் கடத்தியாகும்.

உமிழ்நீரைச் செலுத்தும் நிலையில்தான் கொசு நோய்உயிர்களை இரையின் உடலுக்குட் செலுத்துகிறது என்பதைக் கடிக்குறிப்புமானி நன்கு தெளிவாக்குகின்றது.

கொசுத் தாக்குதலின் பொழுது எலியுடலில் கொசுவின் உமிழ் நீர் பாய்கிறது. இவ்வுமிழ்நீரில் குச்சில்கள் (Bacteria) உள. எலியுடலிற் சென்ற உமிழ்நீரில் குச்சில்கள் இருப்பது அதனுடலிலுள்ள கதிரியக்கத் தனிமங்களாலறியப்படுகிறது. உமிழ்நீரிற் குச்சில்களிருப்பதையும் கடிக்குறிப்புமானி பதிந்து கொள்கிறது.

கொசுக்கள் நோய்க் குச்சில்களைத் தங்கள் உமிழ்நீரின் வழியாகத் தாம் செலுத்துகின்றன வென்பது முன்னரே ஆராய்ச்சியாளர்க்குத் தெரிந்திருப்பினும், கடிக்குறிப்புமானி கண்டுபிடிக்கப்படும் வரை அதன் நுட்பத்தை இவ்வளவு தெளிவாகக் கண்டுரைக்க இயலவில்லை.

இப்பொறியைப் பயன்படுத்திப் பலவகையான கொசுவிலக்கி (Repellent)களை ஆராய்ந்து வருகிறார். இக் கொசுவிலக்கிகளைக் கொண்டு கொசுவின் உமிழ்நீரை உலரச்செய்யவோ அல்லது உமிழ்நீரைச் செலுத்தும் நிலையிலேயே கொசுவை விலக்கவோ முடியுமா என்பதைத் திரு. காசின் ஆய்ந்து வருகிறார்.

ஒரு விலக்குக் குளிகையை உட்கொள்ளுவதாக வைத்துக்கொள்வோம். அது வியர்வைத் தொளைகளின் வழியாக வியர்வையுடன் வெளிப்படும். அப்படி வெளிப்படும் விலக்கி, கொசுத் தாக்குதலைத் தடுக்குமல்லவா? அப்படியொரு குளிகையைக் கண்டுபிடிப்பதே திரு. காசினுடைய ஆராய்ச்சியின் முடிவான நோக்கமாம். 0

அடிப்படை: 'நியூயார்க் டைம்சு'

தமிழில்: ந. முத்துக்குமரன், அறி. இ., ஆ. ப.

தமிழ்ச்சிட்டு, கடலூர்-1

(தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்)

மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

		உள்நாடு.	வெளிநாடு.	கொழும்பு.
ஆண்டுக்கட்டணம்	உருபா	3-00	5-50	4-00
தனியிதழ்	,,	0-25	0-45	0-35

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

சிலந்தியோ! சிலந்தி!!

த. சலாவுத்தீன். அறி. இ., ஆ. ப.

சிலந்தியைப் பற்றி நாமெல்லாரும் அறிந்திருப்போம். அதை எட்டுக்கால்பூச்சி என்றும் கூறுவதுண்டு. அதைப்பற்றிய கதை ஒன்றை எல்லாரும் படித்திருப்போம். விடாமுயற்சிக்கு எடுத்துக் காட்டாகச் சிலந்தி அக்கதையில் புகழப்பட்டுள்ளது. அது வலைகட்டும். அதன் வலையை எல்லாரும் கண்டிருக்கின்றோம். இதற்குமேல் அதைப்பற்றி அறிந்துகொள்ள ஆசைப்படுவதில்லை. இக் கட்டுரையில் சிலந்தியைப் பற்றிய பல வியத்தகு கருத்துகளைக் காணலாம்.

சிலந்திகள் மாந்தனுக்கு மிகுதியும் பயன்படுகின்றன. இவை ஈக்கள், கொசுக்கள், வெட்டுக்கிளிகள் போன்ற பல பூச்சிகளை உணவாகக் கொள்கின்றன. ஒரு சிலந்தி தன் வாழ்நாளில் ஏறத்தாழ 2000 பூச்சிகளை உண்டுவிடுகின்றது. நிலைத்திணைகளை அழிக்கும் பூச்சிகளை மிகுந்த அளவில் தடுத்து நிறுத்துகின்றது. சிலந்திக் கடியால் இறப்புகள் ஏற்படுகின்றன என்பதை அறிவியல் அறிஞர்கள் ஒத்துக் கொள்வதில்லை. இறப்புநேர்வது, தொற்றுநோய், ஒத்துக்கொள்ளாத தன்மை, நெஞ்சாங்குலை வேலை செய்யாமல் இருத்தல்–போன்ற காரணங்களால் தான் என்று அவர்கள் கருதுகின்றனர்.

சிலந்திகள் பூச்சியினத்தைச் சேர்ந்தவை அல்ல. இருந்தாலும் இவை 'பைலம் (Phylum)' "ஆர்துரோபோடா" (Arthropoda) "முட்டுக்காலிகள்" (முட்டுள்ள கால்களை உடையவை) இனத்தைச் சேர்ந்தவை. இவ்வகையைச் சேர்ந்த உயிரினங்களுக்குப் பொதுவாகச் சில அமைப்புகள் உள்ளன. இவற்றின் உடலில் எலும்புகள் இல்லை. மாறாக உடல் கெட்டியான ஓட்டினால் மூடப்பட்டிருக்கும். அசையும் முட்டுகள் பல உடையவை.

சிலந்திக்கும் பூச்சிக்கும் (Insects) சில வேறுபாடுகள் இருக்கின்றன. அவை: 1. எல்லாப் பூச்சிகளுக்கும் ஆறு கால்கள் உண்டு; சிலந்திக்கு எட்டுக்கால்கள் உள்ளன. 2. பூச்சிகளின் உடல் மூன்று பாகமாகப் பிரிந்திருக்கும்; சிலந்தியின் உடல் இரண்டு பாகமாகப் பிரிந்திருக்கும். 3. பூச்சிகளுக்கு உணர் இழைகள் உண்டு. ஆனால் சிலந்திகளுக்கு அவை இல்லை.

'முட்டுக்காலிகள்' (Arthropoda) சில சிறிய குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சிலந்தி அராக்கினிடா' (Arachnida) வகுப்பைச்

சேர்ந்தது. இறுதியில் சிலந்தி 'அரேனியை' (Araneae) வரிசையைச் சேர்ந்தது. 'அரேனியை' என்ருல் 'சிலந்தி' என்பதாகும். ஏறத்தாழ 40,000 வகையான சிலந்திகள் உலகெங்கிலும் பரந்து கிடக்கின்றன. பனிமலையிலுள்ள எவரெஃச்டு முகட்டிலும் (22,000 அடி உயரத்தில்) சிலந்திகள் காணப்படுகின்றன.

சிலந்தியின் உடலமைப்பு:

சிலந்திகள் மூட்டுக்கால்களை உடையவை. இவற்றிற்கு எட்டுக் கால்கள் உண்டு. ஒவ்வொரு காலிலும் ஏழு மூட்டுகள் உள்ளன. சிலந்தியின் முன் பாகத்திற்கு 'செபொலதோராக்சு' (Cephalothorax) என்று பெயர். அதில் தலையும் மார்பும் சேர்ந்திருக்கும் (தனிப் பிரிவு காணப்படாது). அடுத்த பாகம் வயிற்றுப்பாகம். இப்பகுதியில் பட்டு நெய்யும் பகுதி அமைந்துள்ளது. பட்டுநூல், (நெய்யும் உறுப்பிலிருந்து) 'சிபின்னரட்' (Spinnerets) என்ற பகுதியிலிருந்து வருகின்றது. ஆறு நெய்யும் உறுப்புகள் இருக்கும். இவற்றின் உட்பாகத்தில் ஆயிரம் நெய்யும் குழாய்களும் (Spinning Tubes) பெரிய 'இசுபைகாட்சு' (Spigots) என்னும் குழாய்களும் இருக்கும். இவ்வமைப்புகளைக் கொண்டு பலவகையான பட்டு நூல்களைச் சிலந்தி உண்டாக்குகின்றது. மெல்லிய இழை, தடிப்பான இழை, பட்டையான இழை போன்ற பல வகையான இழைகளை உண்டாக்குகின்றது ஒரு வகையான இழையைக் கூட்டுப்புழுவுக்கான கூட்டை அமைக்கவும் மற்ருென்றைக் கூட்டைச் செய்யவும், மற்றதை எதிரிகளைக் கட்டவும் இன்னுென்றை வலையைச் செய்யவும் பயன்படுத்துகின்றது.

பட்டுப்பூச்சியின் பட்டுநூலைவிடச் சிலந்தியின் பட்டு நூல் நேர்த்தியானது. அதிக வலிவுள்ளது. இதைக் கயிறுபோல் திரித்தால் அதே தடிப்புள்ள இரும்புக்கம்பி தூக்கும் எடையைவிட மிகுதியான எடையைத் தாங்கும்.

19-ஆம் நூற்ருண்டில் மடகாசுகர் என்ற இடத்திலுள்ள ஒருவர் சிலந்திப் பட்டுத் துணியை நெய்தார். இத்துணி மிகவும் அழகாக இருந்தது. ஆனல் இதை மிகுந்த அளவில் நெய்ய மிகுந்த பணச்செலவு ஆகின்றது என்று கைவிட்டு விட்டார். சிலந்தியின் பட்டு இழையை ஒளியியல் கருவிகளின் குறுக்கு நூல்களாக (Cross wires) பயன்படுத்துகிருர்கள். பழங்காலக் குடிமக்கள் சிலர் சிலந்தி வலைகளைக் கொண்டு மீன் பிடித்தார்கள்.

சிலந்தியைக் கூர்ந்து நோக்கினுல் இதன் உடலின்மீது நேர்த்தியான மயிர்களும் செதில்களும் இருப்பதைக் காணலாம். சில சிலந்திகள் பளிச்சிடும் வண்ணங்களை உடையனவாகவும் இருக்கும்.

சிலந்தியின் கண்கள்:

சிலந்தியின் இனத்திற்கேற்ப அதன் கண்கள் அமைந்திருக்கும். பெரும்பாலானவை எட்டுக் கண்களை உடையனவாக இருக்கும். சில இரண்டு, நான்கு அல்லது ஆறு கண்களையும் கொண்டிருக்கும். இருட்டான முழைகளில் தங்கள் வாழ்நாள் முழுவதையும் தள்ளும் சில சிலந்திகளுக்குக் கண்களே இல்லை.

எட்டுக் கண்கள் உடையனவாக இருக்கின்றனவே, ஆகையால் அவற்றின் பார்க்கும் திறனும் மிகுதியாக இருக்கும் என்று நாம் நினைக்கலாம். ஆனுல் இவையெல்லாம் கிட்டப்பார்வை உடையவை. குறைந்த பார்க்கும் திறனையுடையவை.

இதன் வாய்க்குப் பின்புறத்தில் 'பெடிபால்ப்சுகள்' (Pedipalps) இருக்கின்றன. இவை காண்பதற்குக் கால்கள் போன்றிருக்கும். ஆனுல் இவைகளில் ஆறு மூட்டுகளே இருக்கும் வாயின் முன்னே 'கெல்லிசரீ' (Chelicerae) என்ற அமைப்புள்ளது. இதன் முனை கொடுக்காக முடிகிறது. இவற்றின் உதவியால் சிலந்தி தன் இரையைப் பிடித்து, கொல்கின்றது. பிறகு அதை நசுக்கி அதன்மீது செரிக்கும் பாய்மத்தைச் செலுத்துகின்றது. இப் பாய்மம் இரையின் உடலுள்ள கண்ணறைகளை மென்மையாக்குகின்றது. இதன்பின் சிலந்தி இதை உறிஞ்சிக் கொள்கின்றது. இரை துள்ளினுல் அதை அடக்க ஒரு நஞ்சை அதன் உடலில் செலுத்திவிடும். இந் நஞ்சு பூச்சிகளைக் கொன்றுவிடுகின்றது.

சிலந்தி வலை:

சிலந்திகளில் சில வலைகளைப் பின்னும். சில வலைகளைப் பின்னுவதில்லை. சிறந்த முறையில் பின்னும் சிலந்தி 'அரேனியா' (Aranea) என்பதாகும். இது நல்ல இடத்தைத் தேர்ந்தெடுத்து வலையைப் பின்னுகின்றது. இதன் அமைப்பு வண்டியின் சக்கரத்தைப்போலிருக்கும். இவ்வலையிலுள்ள இடைவெளிகளை அளந்து பார்த்தால் ஏறத்தாழச் சமமாக இருப்பதைக் காணலாம். இது தன் வலையில் ஒரு பகுதியில் பசை ஒன்றைத்தடவி விடுகின்றது, இதில் ஏதாவது பூச்சி ஒட்டிக்கொண்டால் தப்பிச்செல்ல முடியாது. ஆனுல் 'அரேனியா'

வின் கால்பட்டால் விடுபட்டுவிடும். கால் ஒட்டாமல் இருக்க, காலின் அடியிலுள்ள தோலில் சுரக்கும் ஒரு வகை நெய் பயன்படுகின்றது. இந்த வலைகட்டும் வேலை முழுவதையும் ஒரு மணி நேரத்திற்குள் முடித்து விடுகின்றது. சில சிலந்திகள் நாளும் புது வலைகளைக் கட்டும். சில பழைய வலையைச் செப்பனிட்டுக்கொள்ளும்.

இரையைப் பிடிக்கும் முறை.

அரேனியா வலையைக்கட்டி முடித்தபின் தனியே ஒதுங்கி மறைவில் அமர்ந்து கொள்ளும். அமரும்முன் பசை தடவப்பட்ட இடத்திலிருந்து தனி இழை ஒன்றை இழுத்துக்கொண்டு சென்றுவிடும். ஏதாவது பூச்சி அந்த இடத்திற்கு வருவதை இழையின் அதிர்வு மூலம் அறிந்து கொண்டு உடனே சென்று அப்பூச்சியைப் பட்டு இழைகளால் நன்றாகக் கட்டிவிடுகின்றது. சில நேரங்களில் அதை உடனே உண்ணத் தொடங்கிவிடும். சில நேரங்களில் பின்னால் உண்ணக் காத்து வைக்கும். இவ்வாறு வைக்கும் தன் இரையின்மீது ஒரு நச்சு ஊசியைச் செலுத்திவிடும். இந்நச்சு பூச்சியைக் கொல்வதில்லை. மாறாக அவ்விரை திறனற்றுப் போகச்செய்யும். இது தன் இரையின் உடலிலுள்ள குருதியை உறிஞ்சிச் சுவைக்கின்றது. ஏறத்தாழ 18-மணி நேரம் தன் உணவை உண்ணுகின்றது. உண்டு முடிந்ததும் இரையின் இலேசான ஓட்டை (Shell) எறிந்து விடுகின்றது. இஃது உணவு இல்லாமல் பல திங்கள் கூட இருக்கும்.

சிலந்திகளில் பலவகை

ஓநாய்ச் சிலந்திகள் (WOLF SPIDERS):

பொதுவாகப் பல சிலந்திகள் தங்கள் வலையில் இரை எப்பொழுது வந்து சிக்கும் என்று காத்துக் கொண்டிருக்கும். ஆனால் ஓநாய்ச் சிலந்திகள் அவ்வாறில்லாமல் இரையைத் தேடிச்செல்லும். இவற்றை வேட்டையாடிகள் என்றும் சொல்லலாம். இவற்றின் அறிவியல் பெயர் 'இலகோசா' (Lycosa). கிரேக்க மொழியில் 'இலகோசா' என்றால் ஓநாய் என்று பெயர். உண்மையில் இது பூச்சி உலகின் ஓர் ஓநாய் ஆகும். மற்ற சிலந்திகளைவிட இதற்குப் பார்க்கும் திறன் மிகுதி. இரையை இது பிடித்தவுடன் இறுகக் கடித்து நஞ்சைப் பாய்ச்சி அதைத் திறனற்றுப் போய்விடும்படி செய்து விடுகின்றது. கொடூர இரையாக இருந்தால்–(எடுத்துக்காட்டாக, தேனீ) ஓநாய்ச் சிலந்தி அதன் கழுத்துப் பாகத்தில் கடித்துக் கொன்று விடுகின்றது. ஓநாய்ச்சிலந்திகளில் சிறந்தது 'ஐரோப்பிய டாரன்டுலா'. இது கடித்தால், இத்தாலி மக்கள் நடனமாடினால் சரியாகி விடுமென்று ஆடுவார்களாம். இந்நடனத்திற்கு 'டாரன்டுலா நடனம்' என்று பெயர்

இவை ஈரமான இடங்களில் இருக்கும். சில வகை மண்ணுக் கடியில் துளைசெய்து வாழ்வதும் உண்டு. இவை தங்கள் கூட்டின் மீது அமர்ந்து கூர்ந்து நோக்கிக்கொண்டே இருக்கும். ஏதாவது அசைவு தென்பட்டால் உடனே ஓடிச்சென்று அப்பூச்சியைப் பிடித்து விடும். சில பூச்சிகள் தப்பிச் சென்று விடுவதும் உண்டு.

"இலைகோசாக்கள்" வலையைப் பின்னுவதில்லை. ஆனால் "இலை கோசா" சிறந்த பின்னல் வேலை செய்வது. இது முட்டையிடும்போது பாய்போன்று பின்னி, அதன்மேல் கோப்பை போன்று அமைத்து அதில் முட்டைகளை இடுகின்றது. பின்னர் வலையையும் பந்துபோல் உருண்டையாகச் செய்து விடுகின்றது. பின் இவ்வுருண்டையைத் தன் உடலின் அடிப்புறத்தில் நூலால் இணைத்துக்கொள்ளுகின்றது. எங்குச் சென்றாலும் அத்துடனேயே செல்லும்.

இஃது அங்குமிங்கும் ஓடும்போது சில நேரங்களில் கல்லில் இடிபட்டு முட்டைக்கூடு வீழ்ந்துவிடுவதுண்டு. வீழ்ந்த உடனேயே அதைத் தேடி மீண்டும் எடுத்துக் கொள்ளும். இதன் அடையாளம் காணும்திறன் மிகக்குறைவு. இது தன் முட்டைக்கூடு என்று நினைத்துத் தக்கை உருண்டையைக்கூட எடுத்துச் செல்லுமாம். ஓர் 'இலைகோசா' முட்டை என்று எண்ணி நத்தையின் கூட்டை எடுத்துச் செல்வதை ஓர் இயற்கையியல் (Naturalist) அறிஞர் கண்டுள்ளார்.

குதிக்கும் சிலந்திகள் (Jumping Spiders): இவ்வகைச் சிலந்திகளைப் "பூனைச் சிலந்திகள்', என்று கூறலாம். ஏனென்றால் இவை தங்கள் இரையைப் பிடிக்கும்போது பூனையைப்போல் பதுங்கியிருந்து திடீரென்று தாவிப் பிடிக்கின்றன. இவ்வாறு செய்வதற்கு இதன் கண்கள் இதற்கு மிகுதியும் பயன்படுகின்றன. இதன் தலையின் முன் பகுதியில் நான்கு பெரிய கண்கள் இருக்கின்றன. இந் நான்கில் இடையிலுள்ள இரண்டு கண்கள் முனைகளிலுள்ளவற்றைவிடப் பெரிதாக இருக்கும். இதன்பின் இரண்டு வரிசை சிறிய கண்கள் இருக்கும்.

இவ்வகைச் சிலந்தியை 'சால்டி சிடே' (Salticidae) என்று அறிவியலார் அழைக்கின்றனர். இதன் கால் உகிர்களின் இடையில் ஒட்டும் பசையுள்ள மயிரிழைகள் இருக்கின்றன. இவற்றால் வழவழப்பான தளங்களிலும் இது செங்குத்தாக ஏறமுடிகின்றது. இவற்றின் உடலின் மீதும் அடர்ந்த மயிரிழைகள் அல்லது செதில்கள் இருக்கும். இவை அழகான வண்ணமுடையவை. சிலந்திகளிலேயே மிக அழகானவை-இவைதாம். இவற்றின் கால்கள் குட்டையாகவும், தடிப்பாகவும் இருக்கும். முன்னங்கால்கள் பின்னங்கால்களைவிட நீண்டிருக்கும். பொதுவான மாந்தன் ஒருவன் தாண்டும் 40 அடிக்குச் சமமான தொலைவை இச்சிலந்தியும் தாண்டுகிறது.

இவற்றின் முன்னங்கால்கள் இரையைப் பிடிப்பதற்கு மட்டும் உதவுகின்றன. குட்டையான பின்னங்கால்கள் தாண்டுவதற்கு உதவு கின்றன. ஒரு பின்னங்கால் இல்லையென்றாலும் தாண்டும்போது ஒரு பக்கமாகச் சாய்ந்து தாண்டும். அவ்வாறு ஒரு காலை இழந்த சிலந்திக் குச் சில நாட்களுக்குப் பிறகு புதிய கால் முளைத்து விடுகின்றது. இவை உலகின் பல பாகங்களிலும் இருக்கின்றன. வட,தென்முனை மட்டும் இவை காணப்படுவதில்லை.

இத் தாண்டும் சிலந்திகளை வீட்டில் நாய் பூனை வளர்ப்பது போல் வளர்க்கலாம் என்று கண்டுபிடித்துள்ளார்கள் 'பெக்கம் குடும் பத்தார்' இவற்றை வளர்த்துப்பார்த்தனர். முதலில் ஒரு விரலிலிருந்து மற்ற விரலுக்குத் தாண்டின. இறுதியில் எட்டு விரற்கடை தாண்டக் கற்றுக்கொண்டனவாம்.

நண்டுச் சிலந்திகள் (Crab Spiders):

இவை காண்பதற்கு நண்டுகள்போல் இருப்பதால் இப்பெயரைப் பெற்றன. நண்டு பின்புறமாகவும், பக்கங்களிலும் அசைந்து செல் வதுபோல் இவையும் செல்லும். இவை வலைகளைக் கட்டுவதில்லை. தங்கள் இரையை ஓடி அல்லது மறைந்திருந்து பிடிக்கும். இவ்வாறு செல்வதற்கு இவை சூழ்நிலைக்கு ஒத்துத் தங்களை மாற்றிக்கொண்டு பிறவற்றை ஏமாற்றி விடுகின்றன. இதற்குத் தற்காப்பு வண்ணத்தை மேற்கொள்ளுகின்றன. நண்டுச் சிலந்தியில் ஒருவகை இலையின் மையத்தில் வெண்மையான பட்டால் பாய் அமைத்து அதில் அமர்ந்து கொள்ளும். இதன் வண்ணம் வெள்ளை, கருப்புப் புள்ளிகளாய் இருப் பதால் இதனைக் காண்பது அரிதாகின்றது.

இன்னொருவகை நண்டுச் சிலந்தி தான் அமரும் பூக்களின் வண் ணத்திற்குத் தக்கபடி தன் வண்ணத்தை மாற்றிக் கொள்கின்றது. மஞ்சள் வண்ண மலரிலிருந்தால் மஞ்சளாகவும், வெள்ளை மலரிலிருந் தால் வெண்மையாகவும், இலையிலிருந்தால் பச்சையாகவும் தன் வண் ணத்தை மாற்றிக் கொள்ளுகின்றது.

சில சிலந்திகள் காண்பதற்கு மலரைப்போன்ற அமைப்பை உடையனவாக இருக்கின்றன. இன்னொரு வகை புல், இலையின்மீது அமர்ந்தால் காணவே முடியாது. இலையோடு இலையாக மாறி விடு கின்றது. இன்னொன்று மணலிலுள்ள சிறு கல்லாகவே அமைந்து விடுகின்றது.

(தொடரும்)



[ம. 76] நம் போராட்டம் எப்படி அமையவேண்டும்?

பெருந்தகையீர் வணக்கம். நீண்ட நாட்களாகத் தங்களுக்கு மடல் எழுத வேண்டுமென்று எண்ணி வந்தேன், மடலைவிட நேரில் கண்டு உரையாடுவதையே பெரிதும் விரும்புகின்றேன். பொருள்நிலை இடங்கொடுப்பின் விரைவில் தங்களைப் பார்க்க உறுதியாக வருவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தங்களது நோக்கத்தைப் பொறுத்தவரையில் குறைசொல்லல் இயலாது. ஆனால் வழிமுறையைப் பற்றிய எளியேனின் எண்ணங்களைத் தங்கள்முன் வைத்தல் எனது கடமையாகின்றது.

1. "தமிழ் விடுதலை பெற்றுத், தனித்தமிழாக எல்லாத் துறைகளிலும் முழங்கவேண்டும்."

அ. இதனைச் செயலாக்க வேண்டுமாயின் தமிழ்ப் பகைவர்களை எதிர்த்துப் போராடி வெற்றிகொள்ள வேண்டும் என்பதிலும் ஐயமில்லை. ஆரியர்களும் தமிழ்ப் பகைவர்களாக (பெருமளவில்) உள்ளனர் என்பது உண்மை. எனவே ஆரியர்களும் எதிர்க்கப்பட வேண்டியவர்கள். ஆரியர்கள் என்பதற்காக அன்று; தமிழ்ப் பகைவர்கள் என்பதற்காக எதிர்க்கப்பட வேண்டும். தமிழ்ப்பகை என்னும்போது அஃது ஆரியர்கள் மட்டுமின்றி உள்ளிருந்து கெடுக்கும் எத்தனையோ எத்தர்களையும் உள்ளிட்டதுதானே! அப்படியிருக்க, ஆரியர்களையே பெரிதும்-இனக்கண்ணோட்டத்தோடு-காய்தல் சரிதானா என்பதை ஆய வேண்டுகின்றேன். சரி எனில் சிவசேனை, சிங்களவர், கன்னடியர், வடமாநிலக்காரர்கள் தமிழன் என்ற காரணத்துக்காக நம்மை உதைப்பதும் சரி என்றுதானே ஆகவேண்டும்?

ஆ. உண்மையில் இன்று மொழி யாரால் முன்வைக்கப்படுகின்றது? சுரண்டல்காரர்களால். பம்பாயில் பெருகி வரும் தொழிலாளர் போராட்டங்களையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் சமாளிக்க இயலாத சுரண்டல் பேர்வழிகள்—இவை அனைத்துக்கும் காரணம் தாங்கள் என்பதை மக்களிடமிருந்து மறைக்க எண்ணி

பால்தாக்கரே போன்றோரைப் பணத்தால் விலைக்கு வாங்கி மராட்டிய ரின் துயருக்குக் காரணம் தமிழர்கள் என இனவெறியைத் தூண்டு கின்றார்கள். அவ்வாறே பிற இடங்களிலும் நாமும் ஆரியனை விரட்டு வதில்தான் வரிந்து கட்டுகின்றோமே தவிர—கஞ்சிக்கும் கூழுக்குமாகப் பிரிக் கும் ஆலாய்ப் பறக்கும் நெஞ்சமொடிந்த பஞ்சைத் தமிழனை நசுக்கி அவன்மேல் அமர்ந்து கொக்கரிப்போரை எங்கே ஐயா காணுகின் றோம்?

இ. தமிழ் வளரவேண்டும் என்று நாம் சொல்லுகின்றோமெனில் தமிழனின் வளர்ச்சி அதில் இருக்கின்றது என்ற காரணத்தால்தான். ஆனால் இன்றோ 90 விழுக்காடு தமிழர்கள் எந்த நிலையில் வெந்து மடிகின்றார்கள் என்பது தங்களுக்குத் தெரியாததா? ஐயன்மீர்! வாடு கின்ற தமிழனை முதலில் விடுவித்தால் ஒழிய—மொழிப் போருக்கு முன் வர உறுதியான படை திரளுமென்று தாங்கள்கூட நம்புகின்றீர் களா? மிக்க நாட்கள் பலருடன் பேசிச் சலித்து வழிமுறையை மாற்ற வேண்டிய நிலைக்குச் செலுத்தப்பட்ட காரணத்தால் இவற்றை முன் வைக்கின்றேன். அத்தோடு அரசியல், அதன் அடிப்படையான பொரு ளியல் துறைகளில் போரிடாமல் மொழியுரிமையைக் காத்துவிட முடி யுமா? அரசியல், பொருளியல் விடுதலை இன்றி மொழிவிடுதலை பெற இயலுமா? இவற்றில் எது முதல் என்பதை ஆய ஆய பொருளியல், அரசியல் விடுதலை பெறுவதே முதன்மை, பின்னர் மொழிவிடுதலை பெறுதல் மிக எளிமை என்பதே உண்மை என்று தோன்றுகின்றது.

2. சாதி ஒழிப்பு: ஆரியர்கள் சாதிப்பிரிவினைகளுக்குக் கார ணம். அஃது உண்மை. ஆனால் இன்று பின்தங்கிய மக்களைக் கொடு மைக் காளாக்கி, சாதியை நீடித்து வைப்பதில் வன்முறையில் இறங் கிப் போராடவும் துணிவாகவுள்ள பகுதி—பெரும்பகுதி—ஆரியர்கள் அல்லர். இடைநிலையில் உள்ள ஆரியர் அல்லாதோரே. கீழவெண்மணி குருதி நிகழ்ச்சியில், தொடர்புடையவர் ஒரு நாயுடு. எனவே சாதியை ஒழிக்க ஆரியனை எதிர்ப்போம் என்பதைவிட—சாதியைக் கடைப்பிடிக் கும் அத்தனைப் புல்லுருவிகளையும் ஒழிப்போம் என்பதே சாலப் பொருந்தும்.

ஐயன்மீர், பயிர்வகையைச் சேர்ந்த ஒன்று என்ற காரணியத்தால் களையையும், நெற்பயிரையும் சேர்த்தா நோக்குகின்றோம். நெற்பயி ரின் உணவை நெறியற்ற முறையில் உறிஞ்சுகின்ற களையை அஃது

எவ்வகையானதாக இருப்பினும் பிடுங்கியெறியத் தயங்குவது கூடாது. அதுதான் சரியானவழி. அதேபோல் மேய வரும் கழுதை களையும் விரட்டவேண்டும். தமிழினத்தினுள்ளே உள்ள புல்லுருவி களை, உழைக்காத பகுதியை, உழைக்காது ஏற்படும் மதத்தால் ஊர்க் கதைகள்பேசி (வாரியார் போன்றோர்) மூடக்கருத்துகளைப் பரப்பு நரைத்-தமிழைக் கெடுப்போரை-கெடுப்போர்க்குத் துணைபோவோரை என அனைத்து எதிரிகளையும் எதிர்க்கச் சரியான வழியில் முனைந்தால் உறுதியாக வெற்றி பெறலாம். இனவெறிக் கொள்கை இட்லர் (Hitler) என்பவன் நிலையில்தான் விடும். இட்லரின் கொள்கையால் செருமானிய உழைக்கும் இனம் அழிந்தது. உலகு முழுதும் உழைக் கும் இனம் பேரிழப்பு அடைந்தது. சுரண்டல் பேர்வழிகள் உயர்ந் தார்கள். உலகப் போரில் பெரிதும் வளர்ந்தோர் டாடா, தியாகராய செட்டி முதல் இராக்பெல்லர்வரை என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அத்தகைய ஒரு நாகரிகமற்ற வழிக்கு அழைத்துச் செல்வது தமிழ்ப் பண்புக்கு முற்றிலும் மாறுனது என்றே நம்புகின்றேன். குருதி கொட்ட உழைத்தும், உணவு, உடை, இருப்பிடம் இன்றி வாடும் தமிழர்களுக்காக முதற்கண் ''பொருளியல், அரசியல் சுரண்டலை ஒழிப்போம்'' என்ற முறையில் போராடி, இரண்டாவதாக "அவர்களை உணர்வு அடிப்படையிலும் சுரண்டுவதற்கு இடமளியோம்; அதையும் விரட்டுவோம்'' என்ற முறையில் மொழி விடுதலைப்போரை வைத்தலே நடைமுறைக்குகந்தது என்று எண்ணுகின்றேன்.

–கோ. திருநாவுக்கரசு-காரைக்குடி–4.

[ம. 77] பார்ப்பனர்களின் சூழ்ச்சி!

அண்மையில், தமிழ்நாட்டுச் சட்டமன்ற மேலவையில் குறிப்பிடத் தக்க பார்ப்பனர் ஒருவர் வினவிய வினு ஒன்றுக்கு, கல்வியமைச்சர் திரு. நெடுஞ்செழியன் விடையளிக்கையில், கீழ் வகுப்புகளில், அதா வது ஐந்தாம் வகுப்பிலிருந்தே ''சமற்கிருதம்'' கற்பிப்பதுபற்றி அரசு ஆராய்ந்து வருவதாகவும், தற்போது உள்ள தொழிற்பயிற்சி தொடர் பான பாடநேரத்தில் ''சமற்கிருதம்'' கற்பிக்க வாய்ப்பு உண்டா(?) என்று ஆராயுமென்றும் கூறியுள்ளதாகத் தெரியவருகிறது. இத் தகைடதொரு செய்தி பழைய புக்தவத்சலன்கள்(!) ஆட்சியில் கேட் டிருப்போமேயானுல் அது வியப்புக்குரியதாகாது. தாய்மொழிப் பற்றுள்ள தமிழர்கள் ஆட்சியில் அறிகின்ற நாம் வெட்கப்பட வேண்டியவர்களே!

இறந்த மொழியான சமற்கிருதத்தை அரியணை யேற்றப் பார்ப்பனர்கள் இவ்வரிய முயற்சியினை மேற்கொண்டுள்ளனர்! தமிழர்கள் தங்கள் தாய்மொழிக்காப்புக்கு ஏற்படுத்தப்பட்ட "இருமொழிக் கொள்கை"யை உடைக்கவே பார்ப்பனர் முயற்சி செய்கின்றனர்.

அறிவியலின் வாயிற்படியான ஆங்கிலத்தையும், தாய்மொழியான தமிழையுமே நன்முறையில் கற்காத இன்றைய இளைஞர்களுக்கு, கீழ்வகுப்புகளிலிருந்தே "சமற்கிருதம்" கற்பிக்க வேண்டுமா? அதுவும் தொழிற் பயிற்சி நேரங்களில் கற்பிக்க வாய்ப்பு வேண்டுமா? தொழிற் பயிற்சியைவிடச் சமற்கிருதத்தினால் ஏதேனும் பயன் உண்டா?

சிறிது இடம் கிடைத்தாலும் அதைக்கொண்டு தங்கள் அதிகாரத்தை வலுப்படுத்திக் கொள்ளும் பார்ப்பனர்களிடம், இதுபோன்ற செயல்களில் தமிழர்கள் விழிப்பாகவே இருத்தல் வேண்டும். எனவே இன்றைய அரசு மேற்கண்ட ஆராய்ச்சியைக் கைவிட்டு, மேலும் இதுபோன்ற பார்ப்பனர்களின் புரட்டுகளுக்கும், பூச்சாண்டிகளுக்கும் சிறிதளவும் இடமளிக்காமல் இருக்கவேண்டும். இந்நாளில் பார்ப்பனர் ஏடுகளே மிகுந்துள்ளமையால் இதுபோன்றவற்றைச் சுட்டிக் காட்டவோ, கண்டிக்கவோ எந்தச் செய்தித்தாளும் தன் முழுத் துணிவைக் காட்டவில்லை! இந்நிலை இப்படியே நீடிக்குமானால் தமிழ்நாட்டின் எதிர்காலநிலை என்ன? தமிழ்நாடு உருப்படவேண்டாவா?

—ஆ. கிருட்டிணன், (உ த. க), நத்தம் வ. ஆ.

[ம. 78] ஆரிய அடிவருடிகளுக்கோர் எச்சரிக்கை.

அன்பார்ந்த பாவலர் அவர்களே!

பிறப்பின்மேல் ஐயப்படத்தக்க ஆரிய அடிவருடிகள் சிலர் "திருவில்லிபுத்தூர்" என்ற ஊர்ப்பெயர் "ஸ்ரீவில்லிபுத்தூர்" என்றே இருப்பதற்காகப் போராட்டம் நடத்தக் குழு ஒன்றை அமைத்துள்ளனராம். ஆரியர் இந்நாட்டில் ஊடுருவியபோது, ஆரியத்துக்கு மேன்மையூட்ட திருமுதுகுன்றம் என வழங்கும் பழமலையை, விருத்தாசலம் என்றும், திருமறைக்காட்டை வேதாரண்யம் ('அரண்ய' என்பதும் தமிழ் அரணத்தின் திரிபே!) என்றும், திருமயிலாடுதுறையை, மாயூரம் என்றும், தில்லைச்சிற்றம்பலத்தைச் சிதம்பரம் என்றும், வினைதீர்த்தான் கோயிலை, வைத்தீசுரன் கோயில் என்றும் வடமொழியிற் பெயர்த்த

னர். நீலமலையை நீலகிரியென்றும், திருக்குடந்தை அல்லது குட மூக்கை, கும்பகோணம் என்பது ஆரியச்சொல் எனக்கருதி கும்பகோணம் என்றும் வழங்கினர்.

10-10-69 அன்றிரவு 10-45 மணிக்குத் திருச்சி வானொலியில் பேசிய "பனைமலை"யூர்க்காரர் தம் ஊரின் பண்டைப்பெயர் தாளகிரி யென்றும், அஃது எப்படியோ, எப்போதோ தமிழாக்கப்பட்டு பனை மலையென ஆனதாகவும் 'மகள் அன்னையைப் பெற்றுள்' எனுமாறு கூறித் தம் அடிமைப் பட்டயத்தைப் புதுப்பித்துக்கொண்டார். தாள என்ற சொல்லும் தமிழ்த் தாளி (பனை)யின் திரிபு என்பதை அவர் அறியார்.

ஊர்ப்பெயர்களின் முன்னொட்டைத் திரித்து, அன்றி மாற்றி 'திரு'வை ஸ்ரீ யாக்கினர். "திருவரங்கப் பெருநகர்" என ஆழ்வார் களால் பாடப்பெற்ற, தொன்றுதொட்டு வழங்கப்பெற்ற திருவரங்கம் ஸ்ரீரங்கம் ஆயிற்று. காவிரிக்கும் கொள்ளிடத்துக்கும் இடைப்பட்ட இவ்வாற்றிடைக்குறை (= அரங்கம்) திருமால் கோயிலை யுடைமை யால் திரு என்னும் பெயரடை பெற்றது. 'ரங்க' என்ற சொல்லுக்கு வடமொழியில் வேரில்லை. நிறத்தை அல்லது சாயத்தைக் குறிக்கும் ரஞ்ச் (Ranj) என்னுஞ் சொல்லொடு தொடர்புபடுத்தி, தம் அறி யாமையையோ, அழுக்காற்றையோ காட்டுவர். (வடமொழி வரலாறு. பக்கம்-76.)

வடசொல்லாக மாற்றியதற்குச் சான்றுகள்:

ஆரியர்கள், இங்ஙனம் வடசொற் பெயர்களை யிட்டுத் தமிழ்ப் பெயர்களை வழக்கு வீழ்த்த முயன்றமையைத் தெற்றெனக் காட்டும் இரு சான்றுகளாவன:

1. தஞ்சையில் வடவாறு, வெண்ணாறு, வெட்டாறு, குட முருட்டி, காவிரி யென்னும் ஐந்து ஆறுகளின் எல்லையில் அமைந் துள்ள ஊர் ஐயாறு என்னும் திருவையாறு. அவ்வூரில் கோயில் கொண்ட ஐயாறப்பனைப் "பஞ்சநதீச்சுரன்" எனப் பெயர்த்துத் தம் மனம் போனவாறு சமயத் துறையிற் புகுந்து கலக்கிய ஆரியரால், மக்கள் வாயில் வழங்கும் திருவையாற்றைப் பஞ்சநதீச்சுரம் ஆகஆக்க இயலவில்லை. இதையறியாத, அன்றி அறிந்தும் திரிக்க விரும்பிய ஆரியத் தாளிகையாளர் ஒருவர், 'தி. மு. க. அரசு வருவதற்கு முன்பு கூட' "பஞ்சநதீசுரன்" என்ற கடவுளின் பெயரை 'ஐயாறப்பன்" எனத் தமிழாக்கி எழுதியுள்ளனர்' எனப் பகடி செய்துள்ளார்.

திருமால்குன்றம் என்னும் அழகர் மலையில் உள்ள யாறு: சிலம் பாறு (சிலம்பு-மலை). சிலப்பதிகாரத்தில் (கக: கOஅ) இம் மலையாற் றைப் பற்றிய குறிப்பு உள்ளது. மொழிபெயர்த்த வடமொழியாளர் சிலம்பு என்பதைக் காலில் பூட்டும் அணியாகக் கருதி நூபுரகங்கை எனத் தவறாகத் திரித்துவிட்டார்.

தமிழக அரசு புல்லர் சிலரின் வேண்டுகோளைப் புறக்கணிப்பது குறித்து மகிழ்கிறோம். பிற்காலத்தில் உண்டான தமிழ்நாட்டு ஊர்ப் பெயர்களில் உள்ள வேறுபாடுகளையும் களைந்து-மேற்கோளாக இராச பாளையத்தை அரசபாளையம் எனவாக்கி எல்லா இடப்பெயர்களையும் தமிழாக்கி, மக்கள் பெயர்களையும் தமிழாய்ச் சூட்ட எல்லா முயற்சி களையும் செய்யவேண்டுமென்று தமிழ்நாட்டரசைத் தமிழின் பெயரால் கேட்டுக்கொள்கிறோம்.

மக்களின் உணர்ச்சியை மிதித்தே பழகி, அதனால் தம் ஆட்சி பறிபோன வயிற்றெரிச்சலில் தி. மு. க. அரசு கொண்டுவரும் எந்தத் திட்டத்தையும் எதிர்க்க முயன்றுவரும் இப்பேராயத் தலைவருக்கு ஓர் எச்சரிக்கை: "நீங்கள் தி. மு. கழகத்தை எதிர்க்கலாம். அதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. ஆனால் 3000 ஆண்டு அடிமைத் தன்மையிலிருந்து விலக ஒளி சிறிதே யடைந்துவரும் இந்நேரத்தில், இந்தத் தி. மு. க. அரசினர் இயற்றும் ஒருசில குமுகாயச் சீர்திருத் தங்களையும், தமிழ்ப் பேணல்களையும் எதிர்த்துக் குழப்பம் உண் டாக்க எண்ணினால், அதற்கு வாளாவிருக்க இங்குள்ள தன்மானத் தமிழர்கள் இளித்தவாயர்களல்லர்."

"......கெடல் எங்கே தமிழின் நலம் அங்கெல்லாம் தலையிட் டுக் கிளர்ச்சி செய்க!"

எப்படிப்பட்ட கிளர்ச்சி?

"கொலைவாளினை எடடா மிகு கொடியோர் பழியறவே!"

—'செங்குட்டுவன்' திருச்சி-க.

(ம. 79) தனித்தமிழ்நாடு.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக நாம் இந்தியை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கின்றோமே, என்ன பயன் கண் டோம்? நம்மால் வடவனின் ஓர் உச்சி மயிரையாவது அசைக்க முடிந்

ததா? அவன் உள்ளத்திலே எரிந்து கொண்டிருக்கும் வெறித்தீ நாக்குகளில் ஒன்றையாவது அணைக்க முடிந்ததா?

இல்லை, இல்லை என்று இன்று வடவரின் ஒவ்வொரு சொல்லும் செயலும் நம்மைக் கண்டு ஏளனமாக நகையாடுவதைப் பாருங்கள். இந்தி எங்கணும் பரவிட வளர்ந்துகொண்டிருப்பது தெள்ளெனப் புலப்படும். இந்தியைப் பரப்ப ஒன்பதுகோடி உருபாக்கள்—நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில். அதில் பாதிக்குமேல், அதாவது ஐந்து கோடிகளுக்கு, இந்தி பேசாத மாநிலங்களில்.

இந்தி ஆசிரியர்களை அமர்த்துதற்கு இந்திப் பயிற்சிக்கல்லூரிகள் நிறுவ	75 இலக்கம்
இந்தி பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகை	—70 இலக்கம்
தனியார் இந்தி பரப்பு கழகங்களுக்கு	—70 இலக்கம்
இந்தி கலைக்களஞ்சியம்	— 3 இலக்கம்
அஞ்சல் மூலம் இந்தி கற்றுத்தர	—15 இலக்கம்
இந்தி பயிற்று மொழிக்கல்லூரிகள் நிறுவ	—50 இலக்கம்

இவ்வளவும் எங்கே? இந்தி பேசாத மாநிலங்களில். செலவிடப் படும் மொத்த தொகை 9 கோடிகள். வலைகள்—மிகமிக அழகாக—இங்கே விரிக்கப்பட இருக்கின்றன. ஒட்டிய வயிற்றை எண்ணி வாடிக்கொண்டிருக்கும் தமிழர்கள் அதில் சிக்கமாட்டார்களா என்ற நப்பாசையால். தமிழர்கள் சிக்காமல் இருக்கலாம். ஆனால் பணத்திற் காகத் தன் மானத்தையேகூட விற்கத்துணியும் சிலராகிலும் சிக்காரா, என்ன?

இங்கேயுள்ள அரசியல்வாதிகளும், இந்தியை எதிர்ப்பதாகக் கூறும் மற்றவர்களும் ஒரு கேள்விக்கு விடை கூறியாக வேண்டும். இங்கேயுள்ள தமிழர்கள், உணர்வுள்ள காரணியத்தால், அடிமட்டத் தில்தான் உழல வேண்டுமா? தங்களுக்கு வரவேண்டிய பதவி உயர் வுகளை இழக்கத்தான் வேண்டுமா? அதன்மூலம் மாற்றார் உயர வழி வகை செய்யத்தான் வேண்டுமா?

'வேண்டா' என்பது உங்களின் விடையானால், நாம் இந்தியை எதிர்த்து இன்றுவரை போராடி வந்திருக்கின்றோமே அது தவறு என்பது அதன் பொருள். அப்படியானால் இந்தியை ஏற்றுக்கொண்டு விடுவோமா?

இங்கு வடவனுக்கு எத்தனை உரிமைகள் இருக்கின்றனவோ, அத்தனை உரிமைகள் நமக்கும் உண்டு. அவர்களிடம் சென்று, கை கட்டி வாய் பொத்தி நின்று, "ஐயா, எங்கள் மொழிக்கும் ஏதாவது போடுங்கள்; இந்தியை ஆட்சிமொழி இடத்திலிருந்து நீக்கிவிடுங்கள்" என்று கூற நாம் அடிமைகளா என்ன? அதனால், அடுத்த போராட்டம் இந்தி எதிர்ப்புப் போராட்டமாக இருக்க முடியாது. அது 'தனித்தமிழ்நாடு' கோரும் போராட்டம்; பேய்களாம் வடவர்களின் பிடியினின்று விடுதலை பெறும் போராட்டம்; தீயவர்களின் உறவைப் பிரிக்கின்ற போராட்டம். தமிழர்களே! ஒன்றுபடுங்கள், வென்று வருவோம்.

—நக்கீரன், கிண்டி, சென்னை-25.

மேலாளர் தேவை.

அண்மையில் அமர்த்தவிருக்கும் தென்மொழி மேலாளர் பணிக்கு அச்சக ஈடுபாடும், போதிய தமிழ், ஆங்கிலப் புலமையும், கணக்கறிவும், தொண்டுள்ளமும் கொண்ட ஒருவர் தேவை. வர விரும்புபவர் 300 உருபா பொறுப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

மொத்த ஊதியம்: 100 உருபா. ஆண்டுயர்வு 10 உருபா.

பிற விளக்கங்களுக்கு,

அமைச்சர்,
தென்மொழி. கடலூர்-1

தென்மொழி அன்பர்கள் கவனிக்க.

மடல்கள் எழுதுகையிலும், தொகை விடுக்கையிலும் அன்பர் பலர் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, உ. த. க. ஆகிய முப்பிரிவுகளும் உள்ளடங்கிய செய்திகளுக்காக ஒரே மடலாகவும் ஒரே தொகையாகவும் விடுக்கின்றமை கோப்பு முறைக்கும் கணக்கு வைப்பிற்கும் பெரிதும் இசைந்து வராததாக விருக்கின்றது. எனவே மடலோ தொகையோ விடுக்கும் அன்பர்கள் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, உ. த. க. ஆகிய முப்பகுதிகளுக்கும் தனித்தனியே விடுக்கக் கேட்டுக் கொள்கின்றோம். ஆசிரியர்க்குத் தனிப்பட்ட செய்திகள் குறித்தெழுத விரும்பும் அன்பர்கள் தனித்த மடல்வழியாகவே தொடர்பு கொள்க.

—அமைச்சர்.

உ. த. க. வுக்குக் கொள்கை உண்டா?

விடுப்போன்:

இ. மறைமலை, எம். ஏ.,
மே/பா. பண்டாரகர்,
சி. இலக்குவனார்,
சி 17, திருநகர், மதுரை-6.

பெறுவோர்:

திரு. பெருஞ்சித்திரனார்,
ஆசிரியர்–தென்மொழி,
பொதுச்செயலாளர்-உ. த. கழகம்.
கடலூர்-1.

அன்புசால் ஐயா,

வணக்கங்கள். சென்ற (நளி, சிலை) திங்கள் தென்மொழி இதழ் கண்டேன். என்னால் அனுப்பப்பட்ட கட்டுரை ஒன்றை வெளியிட்டிருப்பதுடன் என் பெயரையும் என் தந்தையார் பெயரையும் உலகத் தமிழ்க்கழகச் சொற்பொழிவாளர் பட்டியலில் எங்கள் இசைவு பெறாமல் வெளியிட்டுள்ளீர்கள். அதற்கு எனது மறுப்பையும் வருத்தத்தையும் தெரிவிக்கும் முறையில் இம் மடலை விடுக்கின்றேன்.

"நம் உலகத் தமிழ்க் கழகக் கொள்கை விளக்கங்களையும்...... உரமும் திறனும் சான்ற வகையில் எடுத்துக் கூறும் வல்லமை சான்ற சொற்பொழிவாளர்" என்று குறிப்பிட்டுள்ளீர்கள்.

உலகத் தமிழ்க் கழகத்திற்குக் கொள்கை விளக்கம் இருக்கிறதா? என்பதே எனது முதற்கேள்வியாகும். கொள்கை விளக்கம் இருந்திருந்தால் ஓர் உருபா கட்டி அடிப்படை உறுப்பினராகக் கூட ஆகாத எங்களை உலகத் தமிழ்க் கழகச் சொற்பொழிவாளர் என அறிவிப்பீர்களா? உலகத் தமிழ்க் கழக அடிப்படை உறுப்பினராகக் கூட இல்லாதவர் போய்க் கொள்கை விளக்கம் செய்ய முடியுமா, "அனைவரும் உறுப்பினராகுங்கள்" என்று?

அடிப்படை உறுப்பினர் ஆகாதது உனது குற்றம்தானே என்று நீங்கள் எதிர்வினாத் தொடுக்கலாம். மதுரை மாவட்ட அமைப்பாளர் பொறுப்பைக்கூட என்னிடம் ஒப்படைத்தீர்கள். (நல்ல வேளையாக நான் விலகிக்கொண்டேன்). பொறுப்பை நான் செவ்வனே செய்ய இயலவில்லை. காரணம் உலகத் தமிழ்க் கழகத்தின் குறைகளே யாகும்.

அடுத்தவர் மேல் குறைகளைச் சுமத்துவதாலேயே உலகத் தமிழ்க் கழகத்தை வளர்த்துவிடலாம் என்று பலர் நம்புகின்றனர். ஆளுங் கட்சியையும். அமைச்சர்களையும் தமிழ்ப் பற்றற்றவர்கள் என்று

காட்டுவதால் உலகத் தமிழ்க் கழகத்தை வளர்த்துவிடலாம் என்று நினைத்தால் உலகத் தமிழ்க் கழகத்திற்கு வேறு புதைகுழியே தோண்டவேண்டுவதில்லை என எச்சரிக்க விரும்புகிறேன்.

தமிழ்ப் பண்பையும் மொழியையும் சிதைக்கும் வகையில் வரும் இற்றைத் தாளிகைகளின் போக்கை எண்ணி மனம் நொந்து போவதனுல் 'தென்மொழி'யை வளர்க்க விரும்புகின்றோம். ஆனுல் 'தென்மொழி' ஆள்வோரையும் பிறரையும் குறை கூறுவதில் இன்பம் கண்டால் யாருக்கு நன்மை?

கல்லக்குடிப் பெயர் மாற்றத்திற்காகத் தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்த தமிழ்ச் செம்மல் கலைஞர். மு கருணுநிதி அவர்களைப் போய் "அருட்செல்வம்" என்று பெயரை மாற்றிக்கொள்ளுங்கள் என்று கூறினுல் இதை எந்த அறியாமையுடன் கொண்டுபோய்ச் சேர்ப்பது?

எவரையும் எளிதில் பகைவராக்கிக் கொள்ளலாம். ஆனுல் நண்பராக்கிக் கொள்வது அரிய செயல். செயற்கரிய செய்து பெரியராகாமல் செயற்கெளிய செய்வது எதனுல்?

முதன் முதலில் தென்மொழியில் பதினுறு பக்கங்களுக்கும் மேலான ஆசிரியவுரை வெளிவந்தது, அறிஞர் அண்ணுவைத் தாக்கித்தான். "தேர்தல் காலத்தில்" தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ் நாட்டின் முதலமைச்சராய்த் திகழ வேண்டும் என்ற பாவேந்தரின் கனவை நனவாக்க மாணவர்கள் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாது பேரறிஞர் அண்ணு அவர்களுக்காகவும் தி. மு. க. விற்காகவும் புணியாற்றிக் கொண்டிருக்கும்போது, நீங்கள் செய்த தொண்டு நாலரைக்கோடி மக்களின் தலைவர் அறிஞர் அண்ணு அவர்களைச் சொந்தக் காரணங்களுக்காகப் பழித்துக் கூறியதுதான்.

'காங்கிரசுக்'கட்சியின் கொடிய அடக்குமுறைகளால் நாடு நலிந்து கொண்டிருந்தபொழுது நீங்கள் அறிஞர் அண்ணு அவர்களைத் தாக்கிக் கொண்டிருந்தது, உரோம் நகர் பற்றி எரிந்துகொண்டிருந்தபொழுது இன்னியம் வாசித்த நீரோவின் செயலைவிடக் கொடுமையானது.

தி. மு. க. ஆட்சி பொறுப்பேற்ற பொழுது "திரு. நெடுஞ்செழியனின் கரவற்ற தன்மையினையும் தொண்டு மனப்பான்மையினையும் திரு. கருணாநிதியும் பின்பற்ற வேண்டும்" என்று ஆசிரியவுரை எழுதினீர்கள். உங்களுக்கு யாரைப்பற்றி ஒழுங்காகத்தெரியும் என்று கலைஞருக்கு அறிவுரை கூற முற்பட்டீர்கள்.

உங்கள் அறியாமையைப் போக்க ஒரு சான்று. கோவை இந்தி எதிர்ப்பு மாநாடு முடிந்ததும் அம் மாநாட்டின் முடிவைத் தோழர் திரு. சானகிராமன், புலவர். திரு. சா. மருதவாணன் ஆகியோரின் உதவியுடன் அறிஞர் அண்ணா அவர்கட்குத் தொலைபேசியின் மூலம் தெரிவிக்க முற்பட்டேன். அப்போது "அறிஞர் அண்ணா அவர்கள் வீட்டில் இல்லை" எனவும் கலைஞர் கருணாநிதி அவர்களின் வீட்டிற்குச் சென்றிருப்பதாகவும், கூறப்பட்டது. கலைஞர் அவர்கள் வீட்டுக்குத் தொலைகூவல் விடுத்துப் பின்னர் நாடே கோவை மாணவர் மாநாட்டின் முடிவை எதிர்பார்த்த நேரம்–இந்தி எதிர்ப்பால் நாடே கொந்தளித்த அந்த நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் கலைஞர் அவர்களுடைய ஆய்வுரைகளை நாடிச் சென்றார் என்றால், இதை விடவா சான்று வேண்டும் கலைஞர் பெருமைக்கு?

எனவே தங்கள் போக்கை மாற்றிக்கொள்வீர்கள் என நம்புகிறேன். புலவர். குழந்தையைப் பேச அழைத்துக் குழந்தைப் புலவர் எனத் தாக்கியது சரியன்று.

பாவாணருக்கு நீங்கள் செய்த அருந்தொண்டு அவர் இன்றைய ஆட்சியின் எதிர்ப்பாளர் என்ற தவறான கருத்து வெளியில் பரவும்படி செய்ததுதான். தமிழக அரசியலில் முப்பது ஆண்டுகட்கும் மேலாகத் தமிழ் நலன்காக்க ஈடுபாடு கொண்டிருந்த, என் தந்தையார்–உலகத் தமிழ்க் கழகத்தில்–கலைஞர் ஆட்சிக்கு மாறுபட்ட பாதையில் செல்லும் ஓர் இயக்கத்தில்–இம்மியும் பங்குகொள்ள மாட்டார் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, தென்மொழி அன்பர்கட்கு இச்செய்தியைத்தெரிவிக்கும் வகையில் அடுத்து வரும் "தென்மொழி" இதழில் இம் மடலைத் தவறாது வெளியிடுவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

வாழ்க தமிழ்! வளர்க கலைஞர் ஆட்சி!!

ஓங்குக உண்மைத் தொண்டு!!!

மதுரை-6.
13-4-70

என்றும் தங்கள் அன்பன்,
இ. மறைமலை.

போலிக்கே உயர்வா?

-மணிவேலன்.

1. குடிவெறியன் கொடுங்கையில் அடக்கமுடை மனையாளின்
கூந்தல் சிக்கிப்
பிடியினிலே ஆடுதல்போல் 'பேய்க்காற்றுப்' பிடியினிலே
பெரும ரங்கள்
முடியாட்டிக் கொண்டிருக்கும்! முழங்கியெழும் கடலலைகள்!
முத்து மட்டும்
அடித்தளத்தில் அமைதியுடன் இருப்பதன்றி, வெளிவந்து
ஆடல் இல்லை!

2. எச்சிலைகள் விண்ணேறிப் பறந்துசெலும்! சிறுவர்கள்
"ஏ! ஏ!" என்று
மெச்சிடுவர்! கைதட்டி மகிழ்வார்கள்! இந்நிலையே
எதிலும்! எங்கும்!
குச்சுக்குள் குடியிருக்கும் கற்பரசி பெருமையினைக்
கூடிப் பேசி
மெச்சிடுவார் எங்குள்ளார்? பாராட்டுத் தருகின்ற
மேலோர் யாவர்?

3. அயலானின் மடிக்குள்ளே, அம்மியிலே குழவியைப்போல்
புரண்டே, ஆடிப்
புயலாக உரைபேசிக் கற்பரசி யெனநடிக்கும்
பொருட்பெண் டிர்க்குச்
செயலெல்லாம் ஒதுக்கிவிட்டு நாடாளும் அமைச்சர்முதல்
சிறுவர் எல்லாம்
உயர்வான பட்டங்கள் ஒருநூறு தருகின்றார்!
உயர்வு தானோ?

4. பட்டங்கள் பெற்றிருந்தும் பட்டறிவு கொண்டிருந்தும்
படித்த பேரை
"முட்டாள்கள்" என்கின்ற நிலையினிலே ஒதுக்கியொரு
மூலை தன்னில்
கட்டிவிட்டார்! அரைகுறையாய்க் கற்றவர்கள் எழுத்துலகைக்
கட்டிக் காக்கும்
பட்டத்து மன்னரெனத் திரிகின்றார்! அவர்கட்கே
பட்ட மெல்லாம்!

5. நேர்மைக்குப் பெயர்பெற்றும் பொருளியலில் அரசியலில்
நிலைத்து நிற்கும்
பேரறிவைப் பெற்றிருந்தும் "பெரியவிடம்" அடையாது
பிடித்துத் தள்ளி
யார்யாரோ மேலுயர்வர் அரசியலில்! அவர்பின்னே
இவர்கள் எல்லாம்
"நிர்மேதை! வாழ்க" வென்று வாய்கிழியக் கூச்சலிட்டு
நிற்க வேண்டும்!

6. உயிர்கொடுத்த தொண்டர்கள், உறுப்பிழந்த படைமறவர்
உலகோர் கண்ணில்
உயர்வாகத் தோன்றவில்லை! திரைநடிகை பழம்நறுக்க
ஒருவி ரல்மேல்
மயிரளவு சிறுகீறல் விழுந்துவிட்டால்; இழவுவீட்டில்
மார டிக்கும்
நயமில்லா "ஒப்பாரிக் கூட்ட"மென நாளிதழ்கள்
நான்,நீ யென்று

7. தடிப்பெழுத்தில் முதற்பக்கம் செய்திதரும்! மாய்மாலத்
தடிச்சி றுக்கி
துடிப்பதுபோல் படமெடுத்து வெளியிடுமே! இதைக்காணும்
திரைச்சு வைஞர்
இடிவந்து தலைமீது விழுந்ததுபோல் துடிதுடித்தே
இரங்கல் செய்தி
உடனடியாய்த் 'தொலைவரி'யில் விடுப்பார்கள்! இதுதானோ
உயர்வு சொல்வீர்?

8. குடுமிபிடி சண்டையிலே அரசியலை நடத்துகின்ற
'கோட்டான் மாந்தர்'
திடுமென்று மேடையிலே ஏறிநின்று, "மாணவர்காள்!
செவியைச் சாய்ப்பீர்;
விடுவிர்நீர் போராட்டம்! அமைதியொடு இருந்திடுவீர்!
வீணு காதீர்!
கடுமையுடன் நடவடிக்கை ஆசிரியர் மீதெடுப்போம்!
கடமை செய்வீர்!"

9. என்றெல்லாம் பேசிவிட்டே இறங்கியதும் அரசியலில்
யாரை இன்று
பின்னிருந்து தள்ளிவிட்டுக் கவிழ்த்திடலாம் எனச்சூழ்ச்சி
பேசு வார்கள்!

சேனாவரையர் உரைத்திறன்

பேராசிரியர். க. ப. அறவாணன்.

தொல்காப்பியம் நமக்குக் கிடைத்த இலக்கணங்களுள் முதன்மை யானது என்றால் பத்தாம் நூற்றாண்டுக்குப்பின் எழுந்த உரை நூல்கள் அதற்கு அடுத்த முதன்மையும், மதிப்பும் கொடுக்கத்தக்கவை. ஏறக் குறைய இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டுச் செய்யப் பட்ட இலக்கணத்திற்கு அஃது எழுந்த 1500 ஆண்டுகளுக்குப்பின்னே விளக்கந்தருவது எளிதான செயலன்று. தெளிவாக விளங்கிக் கொள்ள முடியாப் பனையோலை எழுத்துகளையும், எளிதாக எழுத முடியா எழுத்தாணியையும் கொண்டு அவர்கள் என்ன பாடுபட்டிருப் பார்கள்? கடலினின்று எடுபட்ட முத்துகள் அழகாக இருந்து மகிழ் வைத் தரலாம்; ஆனால் அவை எத்துணை உழைப்பில் கடலடியினின்று

(முன்பக்கத் தொடர்ச்சி)

நன்னடத்தை யுடையவரை, நேர்மையுளங் கொண்டவரை,
நாட்டைத் தாழ்த்தும்
இன்னலுடை கையூட்டுப் பெறாதவரை "ஏதிலிகள்!"
என்கின் றாரே!

10. நடத்தையிலே நாயாகி, நாட்டுக்கே ஒழுக்கத்தை
நாக்கூசாமல்
இடத்துக்குத் தக்கபடி உரைப்பவரை, கையூட்டு
இருகை நீட்டி
எடுஎடுவென் றெங்கெங்கும் யாரிடமும் வாங்கிப்பின்
மேடை ஏறி
"கெடுக்காதீர் கையூட்டால் இந்நாட்டை!" எனப்பேசும்
கேடர் தம்மைப்

11. "பிழைக்கின்ற வழியறிந்தோர்" எனப்புகழும் திருநாடே!
போலி வாழ்க்கை
தழைக்கிறது, நேர்மையின்று மெல்லமெல்லச் சாகிறதே!
சரியோ அம்மா?
"கழைக்கூத்து வேலையெலாம்" செய்கின்றார் துறைதோறும்!
கடமை யாற்றும்
'பழங்காலக் கட்டைகள்' மூலையிலே கிடப்பதெனில்
பாழ்இந் நாடே!

எடுக்கப்பட்டவை? அது போன்றுதான் தொல்காப்பியக் கடலினின்று உரைகாரர்கள் எடுத்த முத்துகள் விலைமதிப்பற்றவை; அதனினும் அறிவியல் (Science) வளர்வில்லா அக்காலத்தில் அவர்கள் அடியில் மூழ்கி எடுத்தமை மிக மதிக்கத்தக்கவை. இந்த மதிப்புதான், இலக்கிய ஆசிரியர்களோடு, உரையாசிரியர்களை ஒக்க வைத்து எண்ணிப் பார்க்கும் மனப்பான்மையைத் தந்தது.

வள்ளுவர் அன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை-ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறுந்
தண்டமிழின் மேலாந் தரம்.

என உரையை, இலக்கியங்களோடு ஒத்துவைத்து இணையாகப் பாடவும் செய்தது; பார்க்கவும் செய்தது.

உரைகாரர்களிடம் உள்ள பொதுப்பண்பு: காலத்துக்குக்காலம் உரைகாரர்கள் உரை இயற்றியிருக்கிறார்கள். உரை காணுவதில் அவர்கள் ஒருவருக்கு ஒருவர் மறுத்தும், இழித்துங்கூடப் பேசி உள்ளார்கள். அவர்களுக்குள் எத்தனை வேற்றுமை இருந்தாலும் சரி, மூல ஆசிரியனை அவர்கள் தவறியும் குறை கூறியதில்லை. ஒவ்வொருவரும் மூல ஆசிரியன் இவ்வாறுதான் கருதினான் என ஊகிப்பதில் வேறுபட்டார்கள்! ஆனால் நூல் முனைவனை மதிப்பதில் அவர்கள் ஒன்றுபட்டிருந்தார்கள். இந்த மூல நூற்பகுதி உரைகாரர் காலத்து இருந்த உண்மை மொழிவழக்கைத் தராமல் போயிருக்கலாம். விளக்க இயல் (Descriptive) இலக்கணத்தை அவர்கள் விதி இலக்கணம் (Prescriptive) ஆகச் செய்தும் இருக்கலாம். தம் கருத்துகளையும், கோட்பாடுகளையும் நூலுள் புகுத்தி இருக்கலாம். இவை எல்லாம் நேர்ந்திருக்க வேண்டாதவைதாம்; ஆனால் இன்றுள்ள, மூலநூற்கல்வி முழுமை பெறுமலே மூலநூலைக் குறைகூறும் குறைகுட மனப்பான்மையைவிட அவை வேண்டாதவை அல்ல அத்துடன் உரைகாரர்கள் மீது இன்று நாம் கூறும் குற்றச்சாட்டுகள் முற்றும் உண்மையானவை அல்ல.

1. தங்கள் கால மொழிவழக்கையும், தொல்காப்பியத்துக்கு முரணாக உள்ள இலக்கிய வழக்காறுகளையும், வழக்கு வீழ்ந்தவற்றையும் அவர்கள் எடுத்துக்காட்டத் தவறவில்லை. மிகைச் சொற்களாலும், புறனடைகளாலும், உத்திகளாலும் அவர்கள் எடுத்துக் காட்டியவை அந்த அடிப்படையில் காட்டப்பட்டவைதாம்.

2. இலக்கணத்தை வருங்காலத்திற்கும் விதிப்புநூல் ஆகச் செய்தார்கள்; கருதினார்கள். இவ்வாறு விதிக்க (Prescribe) முடியாமல் போகலாம். அது மொழி வரலாற்று உண்மையாகவும் இருக்கலாம். ஆனால் தங்கள் கால இலக்கியங்களும், எதிர்கால இலக்கியங்களும், தொல்காப்பியத் தலைநூலுக்கு அடங்கி இருக்கவேண்டும் என அவர்கள் விரும்பியதைத் தவறு எனக்கூற முடியாது. வரையறைகளும், சட்டங்களும், விதிகளும், கட்டுப்பாடுகளும் வெல்ல முடியாமல் போகலாம்; ஆனால் அதற்காக அவை வேண்டா எனக் கூற முடியாது. வள்ளுவர் காலத்தில் இருந்து 'களவாடல்' இன்றுவரை இருக்கிறது என்பதற்காக, மதுவிலக்குச் சட்டம் கொண்டு வந்தும் வெற்றி பெறவில்லை என்பதற்காக,

'களவு செய்யாதே; மதுவருந்தாதே'–என்ற அறக்கட்டுப்பாட்டு முயற்சிகளை நாம் தள்ளிவிடுவது இல்லை. தள்ளிவிடவும் கூடாது. அன்றியும் இலக்கண உரைகாரர்களால் போற்றப்பட்ட இக்கட்டுப்பாடுகள்தாம், இன்றும் மொழியின் அடிப்படைக் கூறுகளை பெரும்பாலும் மாற்றாமல் காத்து வருகின்றன. இல்லை எனில் தமிழ்மொழி காலந்தோறும் கணக்கற்ற கோலங்கொண்ட வரையறையில்லா மொழியாக இருக்கும். நம்முடைய ஊணும், உடையும் பழக்கங்களும் மாறி இருக்கலாம். ஆனால் நம் உடலின் உள்ளே உள்ள அடிப்படை எலும்பு, நரம்பு அமைப்புகள் மாறிவிடவில்லை. மொழியின் அடிப்படை அமைப்பும் இது போன்றதுதான். அதனுடைய புறத்தோற்றங்கள் மாறி இருக்கலாம். அதன் அகத்தோற்றம் பேரளவு மாறவில்லை. இதை நினைக்கும்போது நாம் இதற்காக உரைகாரர்கட்கு நன்றி செலுத்தியாக வேண்டும்.

3. அடுத்து, தம் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் உரைகாரர்கள் நுழைத்தார்கள் என்பது ஓரளவு உண்மையே! இது மாந்த இயற்கை; தவிர்க்க முடியாதது. என்றாலும் அவர்கள் நுழைத்தனவும் பிறமொழி மரபுகளோடு இணைத்தனவும் மூல நூற்களைச் சிதைப்பதற்காகச் செய்யப்பட்டவை அல்ல; மூல நூற்கள் சிறப்பதற்காகச் செய்யப்பட்டவை.

இந்தப் பொது மரபுகளை மனத்துட்கொண்டு நாம் சேனாவரையரை அணுக வேண்டும். சொல்லதிகாரத்தைப் பொறுத்தவரை, மற்ற உரைகாரர்களுக்கு இல்லாத தனிமதிப்பு சேனாவரையர்க்குக் கொடுக்

கப்படுகிறது. இவ்வாறு தனித்துச் சிறக்கச் சேனாவரையர் ஆற்றி யன என்ன? சேனாவரையருக்கே உரிய தனி நிலைகள் யாவை? இவை ஆராயத்தக்கன.

I முனைவனை அரண் செய்தல்: தாங்கள் ஒரு நூலுக்கு உரை செய்கிறோம்; தாம் எடுத்த முனைவனோ. ஒரு மொழிக்கு இலக்கணஞ் செய்தவன் என்ற நினைவு முதனூல் ஆசிரியனை மதிக்க வைக்கிறது. பாவலன் பாடிவைத்த பாடலுக்குப் பின்னே வரும் திறனாய்வாளன் பாவலனது சொல்லுக்குச் சொல் பொருளேற்றிச் சுவையூட்டுதலைக் காணுகிறோம். அதுபோன்றுதான் முதனூல் ஆசிரியனுக்குப் பல நூறு ஆண்டுகள் பின்வந்தவர் உரைகாரர்கள்; எனினும் சொல்லுக் குச் சொல் பொருள் ஏற்றுகிறார்கள். இதனால் நூலின் திட்பமும், நுட் பமும் வெளிப்படுகின்றன; அத்துடன் உரைகாரரின் நுண்மாண் நுழைபுலனும் புலப்படுகின்றது

சேனாவரையரின் உரை:

1. நூற்பாவின் உரை.
2. எடுத்துக்காட்டு.
3. நூற்பாவில் ஆளப்பட்டுள்ள சொல்லுக்குத் தாம் கொண்ட பொருள்பற்றி விளக்கம்.
4. நூற்பாவின் முறைவைப்புக்குக் காரணம் கூறல்.
5. மறுப்புகள்.
6. பாட வேறுபாடு (83).
7. இலக்கணக் குறிப்பு.

என்ற முறையில் அமைந்துள்ளன. மேற்கண்ட ஏழும் எல்லா நூற் பாக்களிலும் அமைந்து கிடக்கவில்லை; மேற்கண்ட வரிசைப்படியும் எங்கும் அமைந்து கிடக்கவில்லை; அவற்றுள் சில குறைந்தும் இடம் மாறியும் கூறப்பட்டுள்ளன. அவற்றுள், 3, 4, 5 ஆகிய இடங்களில் சேனாவரையர் முனைவனை அரண் செய்தலைக் காண்கிறோம்.

1. நூற்பாவின் போக்கை மாற்றிக்கொள்ளல்: முதல் நூற்பா உலகத்துப் பொருள்கள் உயர்திணை, அஃறிணை என இரு திறத்தன; அவற்றின்மேல் சொல் நிகழும் எனக் கூறுகின்றது. இது சொல்லதி காரம். சொற்களுக்கு இலக்கணங் கூறுதலே எதிர்பார்க்கப்படுவது; இயல்பானதுங்கூட. ஆனால் இங்கே பொருட்பாகுபாடு கூறப்பட்டுள் ளது. இது தேவைதானா என்ற வினா எழும். அதற்கு உரைகாரர்

விடையிறுத்து அமைதிப்படுத்துகிறார். ஈண்டு கூறவந்தது சொற் பாகுபாடே; சொற்பாகுபாட்டுக்கு அடித்தளமான பொருட்பாகுபாடும் கூறுதல் வேண்டும். அதனால் கூறியுள்ளார் எனினும் இந் நூற்பா வின் கருத்து 'உயர்திணைச்சொல், அஃறிணைச்சொல்' என இரண்டு என்றவாறும் எனப் பொருந்திய விளக்கந் தருகிறார். இதுபோன்றே

'னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்
ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்'

எனவரும் நூற்பாக்களின் போக்கு மாற்றி விளக்கந்தருகிறார். ஏனெ னில் முதல் நூற்பாவில் இருதிணைமேல் சொல்வரும் என்பதுணர்த்தி னார். அடுத்து உயர்திணைச்சொல் மூவகை என்றும், அஃறிணைச் சொல் இருவகை என்றும் உணர்த்தினார். அதன்பின் ஆண்பாற் சொல் இவ்வாறு வரவேண்டும். பெண்பாற் சொல் இவ்வாறு வர வேண்டும் என நூற்பா அமைத்திருக்க வேண்டும் நூற்பாவின் போக்கு அவ்வாறு இல்லாது,

'னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்' என னகர ஒற்றிற்கு விளக்கம் தருவதுபோல் உள்ளது. சேனாவரையர், 'ஆடூஉ அறிசொல் லாவது னஃகான் ஒற்று' என மாற்றிக் கொள்க 'அறமாவது அழுக்கா, றின்மை என்றாற் போல' என்று அமைதி செய்கிறார்.

2. ஏற்றப்படும் குற்றத்தைத் தவிர்த்தல்: தொல்காப்பியர் சில இடங்களில் முன்பு கூறியுள்ள செய்தியையே கூறியிருக்கக் கூடும். தேவையில்லாத செய்தியையும் கூறி இருக்கக்கூடும். இவை இலக் கணவாணர்களால் கூறியது கூறல், மிகைபடக் கூறல் எனப் பத்துவகைக் குற்றங்களுள் அடக்கி, முனைவனின் புகழுக்கு இழுக்கு ஏற்படுத்த வாய்ப்பேற்படும். இத்தகு வாய்ப்புகளில் ஆனாவரையர் எனும் சேனாவரையர் தம் விளக்கத் தோணியால் முதனூலாசிரியர்க் குக் காப்பு அளிக்கிறார்.

1. 5, 6, 7, 8, 9 ஆகிய நூற்பாக்களில் பால் ஈறுகளைக் குறிப்பிடுகிறார். அவ்வாறு குறிப்பிடுவதாலேயே அஃது இன்ன இன்ன பாலுக்குரிய ஈறும், பாற்சொற்களும் பெறப்பட்டுவிடும். ஆத லின் அதற்கு முன்னதாக 2, 3 ஆகியவற்றுள் ஆடூஉ அறிசொல், மகடூஉ அறிசொல், பல்லோர் அறிசொல், ஒன்றறிசொல், பலவறி சொல் என்று ஐம்பாற் சொற்களைத் தனியே உணர்த்த வேண்டாமே! அதற்குச் சேனாவரையர் 'ஆடூஉ அறிசொல் முதலாயினவற்றை

உணர்த்தியல்லது அவற்றது இலக்கணம் உணர்த்தல் ஆகாமை யின்'–அவ்வாறு கூறினுர் என்று விளக்கந்தருகிருர்.

2. நூற்பா, 29, 30-இல் தருசொல், வருசொல், செலவுச்சொல் கொடைச்சொல் பெறுகின்ற இடத்தைக் குறிக்கிருர். அவ்வாறு குறித்த அளவிலேயே இன்னின்னசொற்கள் எனப்பெறப்படுமாதலால் நூற்பா 28-இல் (செலவினும் ......) தேவையின்று என்ற மறுப்புக்கு, உரைகாரர் (ஏனைய நூற்பாக்களால் இன்னின்ன இடம் இன்னின்ன சொல் பெறும்) என்பதன்றி 'இடஞ்சுட்டும் முதனிலை இந்நான்குமே என்னும் வரையறை பெறப்படாமையின்' ஈண்டுக் கூறினுர் என் கிருர். இதே போன்ற விளக்கத்தைப் பலபொருள் ஒருசொல் அதிகாரத் தும் (52) விளக்குகிருர்.

3. நூற்பா 157-இல் கூறப்படும் செய்தியே, நூற்பா 15-இல் வருகிறது. இதற்குச் 'செப்பும் விஞவும் வழாஅல் ஓம்பல்' என்றதனுல் இவை எல்லாம் வழுவாதல் அடங்கிற்று. அதனுல் அமைக்கல் வேண்டும் என்பது' என்கிருர்.

3. மிகைச் சொற்களுக்குக் காரணங் காட்டல்:

முதல் நூற்பாவில் 'அவர் அல பிற'–என வருகின்றது. இதனுல் பிற என்றே கூறிவிட்டிருக்கலாம். அல்லது அவரல என்று கூறிவிட் டிருக்கலாம்–அதுவே நூலாசிரியனின் சொற் சுருக்கத்தை உறுதிப் படுத்த வல்லது. ஆனுல் நூற்பாவில் இரண்டும் வருகின்றது. அதற் குச் சேனுவரையர் காரணங்காட்டுகிருர்.

அவரல என்னுது பிற என்றே விடின் யாதல்லாத பிற என்று அவாய் நிற்குமாதலின் 'அவரல' என்ருர்.

மக்கட் சுட்டே என்று மேல் நின்றமையின் மக்களல்லாத பிற என்று உணரலாம் எனின் ஆற்றல் முதலாயினவற்ருல் கொள்வது 'சொல் இல்வழி' என மறுக்க.

அவரல என்றே ஒழியின் அவற்றது பகுதி எல்லாம் எஞ்சாமல் தருவாமையின் எஞ்சாமல் தருவதற்கு அவரல பிற என்ருர்–என்பது அவர்தம் விளக்கம்.

நூற்பா; 18 இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்காறு அல்ல செய்யு ளாறே

என்ற நூற்பாவிலும் 'வழக்காறு அல்ல' என்று சொன்ன அளவி

லேயே 'செய்யுளாறு' என்பது பெறப்படும். ஆதலிற் செய்யுளாறென் பது தேவையின்று. அதற்கும் சேனுவரையர் 'உய்த்துணர்வது சொல்லில் வழிஎன மறுக்க' என உரைக்கிறுர் (நூற்பா: 18, 133, 224-பார்க்க.)

4. வெற்றுச் சொற்களுக்குப் பொருள் ஊட்டல்:

சேனுவரையர் இடைச்சொல் உள்ளிட்ட 'எல்லாச் சொல்லும் பொருள் குறிக்கும்' என்ற கருத்தினர் என்பது முதல் நூற்பா விளக்க உரையால் தெளிவாகிறது. சில நூற்பாக்களில் அவ்வாறு சொற்கள் ஆளப்பட்டும் பொருள் அற்று நிற்பனபோல் நமக்குத் தோன்றுகின்றன. உரைகாரர், அதற்கும் பொருள் கற்பித்து 'வறிதாக முதல் நூலாசிரியன் சொற்களை ஆளான்' என்பதை உறுதி செய்கிறுர்.

நூற்பா: 10-இல் 'தோற்றந் தாமே வினையொடு வருமே' என்ற அடியின் பொருள் 'தோற்றம் வினையொடு வரும்' என்பதுதான்; 'தாமே' என்பது பொருளற்று வெற்றுச் சொல்லாக நிற்கிறது. ஆனுல் அதுவும் 'கட்டுரைச் சுவை' என்னும் பயன்கருதி நின்றது என்கிறுர். நூற்பா: 398, 199 பார்க்க.

நூற்பா 21-இல் 'ஆக்கந் தானே காரண முதற்றே' என்பதில் 'தானே' என்பது வெற்றுச்சொல்; சேனுவரையர் அது செய்யுட் சுவைபட நின்றது என்று விளக்குகிறுர்.

5. நிறைந்த செய்திகள் அடக்கிக் கொள்ளல்:

சில இடங்களில் விரித்துக் கூறியது-வேண்டுமா? என்ற வினுவிற்கு நுண்ணுணர்விஞர்க்கின்றி ஏனையோரால் உணர்தல் ஆகாமையின் விரித்துக் கூறினுர் என விளக்கந் தருகிறுர். இலக்கணம் நுண்ணறிவு உடையார்க்கு அன்றி, அஃது இல்லாதார்க்கும் உரியது என்பது சேனுவரையர் கருத்துப்போலும். இத்தகு விளக்கங்கள் நூற்பா: 16, 21, 119 ஆகியவற்றுள் உள்ளன.

6. முறைவைப்புக்குக் காரணம் கற்பித்தல்:

நூற்பா: 4-இல் பெண்மை சுட்டிய ஆண்மை திரிந்த பெயர்நிலை பற்றிப் பேசுகிறுர். அடுத்து அதன் தொடர்பாக ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி பற்றிப்பேசி இருக்க வேண்டும். அவ்வாறு பேசாது இடையிட்டு ஏழு நூற்பாக்களைக் கடந்து 12-ஆம் நூற்பாவாக,

'ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற்கு ஆகிடன் இன்றே'

என்று தொல்காப்பியர் அமைகிறார். இது சரியான முறைவைப்பன்று என நமக்குத் தோன்றுகிறது. சேனாவரையர் அவ்வாறு முறைமாறிக் கிடப்பதற்குக் காரணங் கூறுகிறார்.

இச் சூத்திரத்தைப் பெண்மை சுட்டிய என்னுஞ் சூத்திரத்தின் பின்வையாது ஈண்டு வைத்தார். இது வழுவற்க என்கின்றது. 'ஆகலான்' என்பது அவர் விளக்கம். 444, 456, 83, 88, 91, 94, 97, 110 113, 114, 154, 155, 165, 171, 179, 196, 208, 222, 230, 231, 108-ஆகிய நூற்பாக்களிலும் இவ்வமைப்புண்டு.

7 அடங்காத செய்திகளை அடக்கிக் கோடல்:

நூற்பாவில் குறித்த செய்திக்குமேல் வேறுபிற இலக்கிய மரபுகள் இருக்குமாறால் அவற்றை முனைவன் கட்டுப்பாட்டை மீறியவை என்றுரைப்பதா? அனைத்தும் அடங்கியன என்று உரைப்பதா? அடங்கியன என்றுரைப்பதுதான் முனைவனுக்கும், இலக்கிய ஆசிரியனுக்கும் உயர்வு தருவதாகும்; அல்லது பொருத்தமாகும் என உரைகாரர்கள் நம்பினர். இந்தத் தங்கள் விருப்பத்தை அவர்கள் மூன்று வழிகளில் தீர்த்துக் கொண்டனர்.

1. நூற்பாவில் வந்துள்ள மிகைச் சொல்லைக் கொண்டும்,
2. புறனடை நூற்பாக்களைக் கொண்டும்,
3. உத்திகளைக் கொண்டும் அடக்கிக் காட்டினர்.

1. 'உருபென மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்
இருவீற்று முரித்தே சுட்டுங்காலை'—24

என்ற நூற்பாவில் 'உருபினும் என்றது உருபென மொழியினும் என்றதனான், உருபின் பொருளவாகிய வடிவு, பிழம்பு, பிண்டமென்னும் தொடக்கத்தனவும் கொள்க' என்று எழுதுகிறார்.

2. 'இயற்பெயர்க்கிளவியும்' என்ற நூற்பாவில் இருமுறை 'இயற்பெயர்' என்பது வந்துள்ளது. அந்த இயற்பெயர் என்ற மிகை யான் நங்கை வந்தாள் அவட்கும் பூக்கொடுக்க எனத் தனித்தனி வினை கோடற்கண் சுட்டுப்பெயர் பிற இலக்கப்படுதல் என்பது போன்றவற்றை அடக்கிக் கொள்கிறார்.

(தொடரும்)

திருவள்ளுவர் ஆண்டு 2000 சிலைத்திங்கள் கூ-ஆம் நாள்
பறம்புக்குடியில் நடைபெற்ற
உலகத் தமிழ்க் கழக முதல் மாநாட்டில்
பாவலர் திரு. பெருஞ்சித்திரனார் நிகழ்த்திய

பாட்டரங்கத் தலைமையுரை.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி) பின்னுரை:

வளமை:

அடுத்தது வளமை!
வளமை என்பது தமிழ்க்கே வாய்த்ததாம்.
அளவறப் பரந்து விரிந்துயர் ஆல்போல்
அகற்சியும் விரிவும் கொண்ட தாகையால்
நுகர்ச்சி தமிழர்க்கு நுண்ணிய தெனவே
ஒருசொல் பலபொருள், பலசொல் ஒருபொருள்,
அருமைத் தமிழில் ஆயிரம் உண்டு!
தமிழில் உள்ள ஓரெழுத்து மொழிபோல்
இமிழ்கடல் உலகில் யாங்கணும் இல்லை.
ஏறத் தாழ அறுபத்து நான்காம்
ஓரெழுத்து மொழிகள் தமிழில் உண்டே!
ஆ, ஈ, ஐ, கா, கு, கோ, கை, தை
மே, மூ, யா, மோ, வீ, வா, தா, வை
மா, மை, பை, தே, போ, மீ, நா, ஈ-
எனவரும் சொற்களை எண்ணிப் பார்மின்!
புல்லைப் 'பிடுங்கு' எனல், பூவைக் 'கொய்' எனல்
வல்ல காயைப் 'பறி' எனல் வழக்கு.
உலகம் அளாவிய ஆங்கிலத் துரைத்தால்
'பிக்' [1] கெனும் ஒருசொலே மூவிடம் பயிலும்.
திக்கெலாம் பரவிய ஆங்கில மொழியில்
காய்க்கென ஒருசொல் இல்லெனக் காண்க.
சோறும் வெந்ததை அரிசி [2] யாய்ச் சொல்லுவர்!
எந்தமிழ் மொழியில் சொற்சோர்வு இல்லை;
செந்தமிழ் என்றும் செழுந்தமிழ் என்றும்
கொழுந்தமிழ் என்றும் தமிழையே கூறுவர்;

---

[1] Pick [2] Rice-சோறு.

யானையைக் குறிக்க முப்பதி னெண் சொல்!
ஆன 'மது'விற்கோ அறுபது சொற்கள்!
'சூரிய'னுக்கு இருபத்து இரண்டு!
மூரி 'முகிற்'குப் பத்தொன் பதுசொல்!
உளை, நவிர், குடுமி, பித்தை, ஓரி
தளை, குழல், குஞ்சி, கார், முடி, தொங்கல்
பங்கி, எனவரும் பன்னிரு சொற்களும்
தங்கும் ஆடவர் தலைமயிர் குறிக்கும்!
குருள், குழல், ஓதி, கூழை, கூந்தல்
குரல், ஐம் பாலொடு, மராட்டம், அளகம்
ஒன்பதும் பெண்டிர் தலைமுடிப் பெயர்கள்!
பின்னகம், முச்சி, கொண்டை, சிகழிகை
கொப்பம்; தம்மிலம், பந்தமென் பனஅவர்
குழல்புனை பெயர்கள்! இன்னும் கூறுவேன்.
தும்பி, மா தங்கம், தூங்கல், கறையடி,
உம்பல், எறும்பி, வாரணம், புழைக்கை
தோல், வல் விலங்கு, நாகம், கும்பி
நால்வாய், பூட்கை, குஞ்சரம், அத்தி
வேழம், கரி, உவா, கைம்மா, சிந்துரம்
களிறு, இபம், வயமா, கைமுகம், புகர்முகம்
தந்தி, மதாவளம், கயம், பகடு, ஒருத்தல்
வழுவை, ஆம்பல், மந்தமா, மருண்மா
மாதிரம், போதகம், என்பன யானையின்
புதுப்பெயர் அல்ல! பழந்தமிழ்ப் பெயர்கள்!
ஒவ்வொரு பெயரும் யானையின் பண்புகள்!
எவ்வொரு மொழியில் இருந்ததிவ் வாறு?
அவ்வள வானே அமர்ந்திலர் தமிழர்.
தால வட்டம்—என்பது யானைவால்!
வேசகம் என்பது—யானை வால்நுனி!
யானையின் முதுகை மஞ்சு என மொழிவர்.
யானை மத்தகம்—கும்பம், மதகம்!
யானை மதம்பாய் கவடு—கரடம்!
யானைக் கைந்நுதி—புழைக்கை யாகும்!
கடம், கடாம், தானம் என்ப ததன்மதம்!
கோடும், எயிறும்—யானைக் கொம்புகள்
நிரியாணம்—என்பது யானையின் கடைக்கண்.
யானைச் செவியடி—சூளிகை ஆகும்.
கவுள்—கதுப்பு; உமிழ்நீர் விலாழி.

யானைப் பல்லடி—கரீரம் ஆகும்.
துதிக்கை—தொண்டை, தொண்டலம், சுண்டை!
வடவை, அத்தினி, கரிணி, பிடி—பெண்ணே!
கயந்தலை, போதகம், துடியடி, களபம்
கயமுனி என்பன யானைக் கன்றுகள்!
கடகம்—என்பது யானைக் கூட்டம்.
யானைப் படுகுழி பயம்பு—எனப் பகர்வர்.
பாகலம் என்பது யானைக்கு வருநோய்!
அம்மவோ! எத்தனை அருந்தமிழ்ச் சொற்கள்
எம்மருந் தமிழில் எத்துணை வளமை!
சொல்லிலை என்பான் சோம்பேறி யல்லனோ!
பல்லெலாம் எண்ணுக யானையின் பெயர்க்கே!
எந்த மொழியில் இத்தனைச் சொற்கள்?
அந்த மொழியைத் 'தென்மொழிக்' கனுப்புக!
யாவரும் கற்றிட யானே வேண்டுவேன்!
ஆவலால் முந்தி அதனைக் கற்கலாம்!
முத்தமிழ் மொழிவளம் மூங்கிலும் உரைக்கும்!
முந்தூழ், பாதிரி, முடங்கல், காம்பு
ஆம்பல், வேழம், அரி, அமை, திகிரி
தூம்பு, வேய், தட்டை, துளை, வேல், வேரல்
கிளை, கழை; விண்டு, பணை, வரை, வெதிரி
என்பன மூங்கிலின் இன்றமிழ்ப் பெயர்கள்!
கன்னி மொழியில் காடு—அறு நான்குசொல்!
மரங்களில் ஆண்பெண் மரபு தெரியுமா?
சருங்காலி முதலிய—வன்மரம், ஆண்கள்.
தெங்கு, பனை, மூங்கில்—வன்புல், பெண்கள்,
முருங்கை முதலிய அலிமரம் என்பர்.
அகக்காழ் உற்றன ஆண்; பெண் புறக்காழ்!
தொகவெளி றுற்றன எல்லாம் அலிமரம்!
எத்துணை மொழிவளம்! எத்துணை அறிவு!
எத்துணை மெய்யுணர் விருந்த தமிழ்மொழி!

இளமை:

வளமை உடைய தமிழ்கண் டீர்கள்
இளமை உடைய தமிழைக் காட்டுவேன்.
ஆயிரம் இரண்டொடு முந்நூறாண்டுகள்
வாயுரைக் கெளிதெனின் வரையறை நீண்டது.
தொல்காப் பியத்தின் தொன்மை அதுவெனு

பல்கால் ஆய்ந்த பாவாணர் உரைப்பார்.
அத்துணைப் பழமை வாய்ந்தஅந் நூலில்
வந்த சொற்களில் பலஇற வாதன.
'விளிம்பு'ம் 'தொகுதி'யும் 'உடைமையும்' போன்ற
இளமைச் சொற்கள் எண்ணி றந்தன.
'தந்தையர் ஒப்பர் மக்கள்' எனும்வரி
முந்தைத் தமிழ்வரி! முதிரா இளமை
பொருந்திய சொற்கள் இன்றும் பொருந்துவ.
முதுமொழி விளக்கிய நூற்பா ஒன்று.
''நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்
எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றி
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி''—என்பது
நூற்பா வர்கும்! இன்று நுதலினும்
வேறுபொருள் பெறுமோ? வேறென்று காண்மின்;
''சூத்திரந் தானே
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுள் தோன்ற யாத்து அமைப் பதுவே''
—சாசர் காலத்து ஆங்கிலம் வேறு!
சாக்சா னியரின் ஆங்கிலம் வேறு.
சேக்சு பிரியரின் ஆங்கிலம் வேறு.
இக்கால் மொழிந்திடும் ஆங்கிலம் வேறு!
துளசி தாசர் எழுதிய இந்தியும்
வழங்கும் இந்தியும் வேறு வேறு!
ஆனால் தமிழில் அப்படி இல்லை.
மேனாள் எழுதிய புறப்பாட் டிதுவாம்!
''சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுளனோவென வினவுதி என்மகன்
யாண்டுளனாயினும் அறியேன் ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே''
சொற்கள் எத்துணைத் தெளிவொடு தோன்றின.
தற்கா லத்துப் பாடல் போல
எத்துணை இளமையோ டுள்ளது பாடல்!
எனவே தமிழரீர்! இதுவரை ஆற்றுப்

புனலோட் டம்போல் தமிழ்நலம் பயின்றோம்.
இன்பத் தமிழின் எண்மைச் சிறப்பை
தம்பாத் திறமையால் பாவலர் தந்தனர்.
நம்மருந் தமிழை நாடிப் புகுந்தால்
செம்மைப் பண்பின் சிறப்புகள் தெளிவீர்!
மொழிநலம் ஒன்றே தமிழரின் முனைப்பாம்!
மொழிநலங் குன்றின் தமிழன் முடங்குவான்.
அறிவிய லுக்கென ஆங்கிலம் படிக்க!
நெறியெனும் வாழ்விற்குத் தமிழ்வழி நிற்கெனக்
கேட்டுக் கொள்ளுவ தோடு
பாட்டரங் கினையுமென் பாட்டையும் முடிப்பனே!

(முற்றும்)

மகிழ்ச்சிச் செய்தி.

ஒருவாறு நாடு கடத்தப்பட்ட பண்டாரகர் சி. இலக்குவனார் மீண்டும் தமிழ்நாட்டில் முன்பு பணியாற்றிய நாகர்கோவில் இந்துக் கல்லூரி முதல்வராக அமர்த்தப்பட்டிருப்பதறிந்து மகிழ்கின்றோம். அது அவர் முன்பு அவாவிய பதவியேயாயினும், தமிழுக்கும் தமிழர்க்கும் அவர் அறிவாற்றலும் தொண்டும் பெரும்பயன்படுமாறு மதுரைப் பல்கலைக் கழகத் துணைக்கண்காணராக அமர்த்தப்பெறின், பெரிதும் மகிழ்வுறுவோம். அவர் நீடு வாழ்க. அவர் பணி பன்மாண் சிறந்தோங்குக.

பெருஞ்சித்திரன்,
பொதுச்செயலாளர், உ. த. க.

ஞா. தேவநேயன்,
தலைவர், உ. த. க.

முகவர்களுக்கு எச்சரிக்கை

தென்மொழிக்கும், தமிழ்ச்சிட்டிற்கும் விற்பனைப் பட்டியல்கள். நிலுவையாக உள்ள அன்பர்கள், தொடர்ந்த நினைவூட்டு மடல்கள் விடுத்த பின்பும், தொகைகளை விடுக்காமலிருப்பது மிகவும் வருந்துதற் குரியதாகும். இத்தகைய நிலுவையாளர்களால் தென்மொழி தான் செலுத்த வேண்டிய பொறுப்புகளினின்று தளரவும், தவறவும் வேண்டியுள்ளது என்பதை அன்பர்கள் எண்ணிப் பார்க்கவும். தாங்கள் விடுக்கவேண்டிய பட்டியல்களின் நிலுவைத்தொகைகள் முழுவதையும் 10-7-70 க்குள் விடுக்காத அன்பர்களின் பெயர்கள் அவர்கள் தரவேண்டிய நிலுவைத் தொகைகளுடன் தென்மொழி, தமிழ்ச்சிட்டு இரண்டிலும் அறிவிக்கப்பெறும் என்பதை மிகவும் வருத்தத்துடன் கூறிக்கொள்கின்றோம்.

—அமைச்சர்.

தென்மொழி பெற்ற அச்சகக் கடன்-ஓர் அறிக்கை.

1965-ஆம் ஆண்டு தென்மொழி எழுப்பிய அச்சக அமைப்பின் மூவாண்டுக் கடன்திட்டப்படி, அன்பர்கள் வழங்கிய கடன் தொகையும், அன்பளிப்பாக வந்த தொகையும், சிலரிடம் தனியாகப்பெற்ற கடன் தொகையும் கொண்டே அச்சகம் நிறுவப்பெற்றது. ஓரளவு மொத்தமாக வந்த இத்தொகைகளன்றி, அவ்வப்பொழுது அன்பர்களிடமிருந்து பெறும் நன்கொடைகள், கடன்கள், பிற முதலீடுகள் ஆகியவற்றைக் கொண்டே, தென்மொழியைத் தட்டுத்தடுமாறி நடத்தவேண்டியுள்ளது. மிகவும் சிறிய முதலீட்டை வைத்துக் கொண்டு தென்மொழிபோல் ஒரு கொள்கை யிதழை நடத்துவது, சிலந்தி வலையால் யானையைப் பிணைப்பது போன்ற ஓர் அரிய செயலாகும். இதனின்று வருவாயை எதிர்பார்ப்பதோ, ஓட்டைப் படகிலேறிப் பொத்தல் வலை வீசி நெற்றிலிமீன் பிடிக்கும் கதையாகும். இவ்வுண்மையை இத்தகைய துறையில் ஈடுபட்டவர்களே தெளிவாக உணர்வர். தென்மொழி தொடங்கிய நோக்கத்தையும், அதற்குத் தேவையென்று நாம் திட்டமிட்ட அச்சகத்தையும், இப்பொழுதுள்ள நம் நிலையையும் ஒப்பிட்டால், தமிழனை எண்ணி எதிலும் ஈடுபடுவது ஒரு தற்கொலை முயற்சியே என்று கூறுவதைத் தவிர வேறுவழியில்லை.

இந்நிலையில் குடிசைக்குக் கால்போடத் தொடங்குகையில் நீர்ச்சீலையை (கோவணத்தை)க் கொடுத்தவன், கூரைபோட மேலேறி நிற்கையில் அதைக் கொடுவென்று கேட்டதுபோல், அச்சகம் அமைக்க அன்று கொடுத்த தொகையை இன்று ஒருசிலர் கேட்கத் தொடங்கியுள்ளனர். அவர்களிடம் முறைப்படி பெற்ற கடனைத் திருப்புவது தலையாய கடமை என்று நானறிவேன். ஆனாலும் பொறிகளாகவும், அச்செழுத்துகளாகவும், பிற பொருள்களாகவும் உள்ள தொகையை நான் உடனடியாகத் திருப்புவதென்றால், தென்மொழியின் நிலை என்னாகும் என்பது எனக்கே தெரியாது. என்றாலும் முடிந்த அளவுக்குச் சிலர் கடன் தொகைகள் திருப்பப்பட்டு வருகின்றன. அன்பர் சிலர் கடன்தொகைகளை நன்கொடையாகவே தந்துள்ளனர். சிலர்க்குச் சிறிது சிறிதாகத் தொகை திருப்பப்பட்டு வருகிறது. எனவே கடன் வழங்கியுள்ள அன்பர்கள் முன் பின்னாகத் திருப்பப்படவிருக்கும் காலத்தாழ்த்தத்திற்குப் பொறுத்துக்கொள்ள வேண்டிக்கொள்கின்றேன்.

அன்பன்,

பெருஞ்சித்திரன்.

தமிழ்ப்பொழில்

(செந்தமிழ்த் திங்கள் இதழ்)

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு.

ஆசிரியர்:

திரு. செ. தனக்கோடி, பி. ஏ.

கடந்த நாற்பதாண்டுகளுக்கு மேலாகத் தமிழிலக்கியத் துறையில் சீரிய பணியாற்றித் தமிழகத்தை உயர்த்திவரும் நற்றமிழ்த் தாளிகை. மொழியியல், இலக்கியம், சமயம், வரலாறு. கல்வெட்டு, மற்றும்பல பயன்மிகு பொருள்பற்றிய அரிய கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகிறது.

தமிழன்பர்கள் உடனே உறுப்பினராகி உறுபயன் பெறுக.

	உள்நாடு	வெளிநாடு.
ஆண்டுக்கட்டணம்	உரு. 5-00	6-00

தொடர்புகொள்க:— ஆசிரியர், "தமிழ்ப்பொழில்"
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-2.

மருத்துவத் துறையில் அரிய முயற்சி!

"முதல் சித்தன்"

(உடல் நலத் திங்கள் ஏடு)

பதிப்பாசிரியர்:

திரு. பண்டித. முத்துக்கருப்பப் பிள்ளை.

கடந்த நான்காண்டுகளாகத் தமிழ் மருத்துவச் சிறப்பினை அனைவர்க்கும் உணர்த்தும் வகையில் பெரும்பணி புரிந்து வருகிறது. மருத்துவம், கணியம், சமயம், குமுகாயம், அறிவியல் பற்றிய பல அரிய கட்டுரைகளையும் அரசினரால் அவ்வப்போது வெளியிடப் பெறும் மருத்துவச் சார்பான . சட்டதிட்டங்களையும் தாங்கி வெளிவரும் உயரிய தமிழ்த் தாளிகையாகும்.

நல்வாழ்வை விரும்பும் அனைவரும் வாங்கிப் பயன்பெறத்தக்க சிறந்த கருவூலம். உடனே உறுப்பினர் ஆகுங்கள்.

தனிப்படி 50 காசு. ஆண்டுக்கட்டணம் உரு. 5-00

தொடர்புகொள்க:— ஆசிரியர் "முதல் சித்தன்"
36, காசிமார் தெரு,
மதுரை-1. (தெ. இ.)

(விளம்பரப் பக்கம்.)

யில் தவழ்ந்து மகிழ்கின்ற சிறு மகவுபோல், தாய்மை உணர்வினை யும், எல்லையற்ற அன்பைக் கொண்டிருக்கும் பேரன்புப் பிழம்பான பரம்பொருளின் கனிவான அன்புணர்வையும் தங்கள்பால் நான் பெற்றேன். கள்ளம் என்பதின் சுவடே பதியாத சிறு மகவின் குறுநகை தங்கள் உள்ளத்தின் முகிழ்த்தெழுந்து முகத்தின் இதழ்விரிக்கும் பான்மை எனக்குப் பேரின்பம் பயத்தது. அருளொளி பொழிகின்ற தங்களின் தண்ணிய பார்வை, கதிரொளிபோல் எனக்கு நன்மை தந்தது. தாங்களும் தமக்கையாரும் கடலூரில் தங்கித் தமிழ்த்தொண்டு புரிந்துவருவது, துறவியர் இருவர் தொழுநோயினால் இடர்ப்படும் மாந்தரிடையே சென்று, அவர்களின் நலன்வேண்டித் தங்கள் நலத்தையும் இழந்து, அவர்களிடையே வாழ்ந்து, அளவிடற்கரிய துன்பங்களை யேற்று, அவர்களை உய்விக்கப் போராடுகின்ற அருள் நெஞ்சத் தூய்மையர்போல் எனக்குத் தோன்றுகின்றது...முன்பெல்லாம் தங்களைவிட்டுப் பிரிந்திருந்த ஏக்கத்தின் ஒலி உள்ளத்தின் ஒரு மூலையில் ஒலித்துக்கொண்டே யிருக்கும். ஆனால் இப்பொழுது, இனி இப்பிறவியில், தாங்கள் எங்களை விட்டுச் செல்லவும் மாட்டீர்கள்; நாங்களும் உங்களை விட்டுப் பிரிதலும் ஒல்லாது என்பதை அறிந்துகொண்டேன். அந்த மகிழ்ச்சியினால், மன நிறைவினால் (ஏன் செம்மாப்பினால் என்றுகூடச் சொல்லலாம்) பெருஞ்செல்வம் கிடைக்கப்பெற்ற வறியவனைப்போன்று இம்மடலை எழுதச் சிறிது காலந்தாழ்த்திவிட்டேன்.

தங்களை விட்டுப் பிரிந்திருந்த போழ்தில் நான் பலருடன் மிகவும் நெருங்கி அன்பைக்கொட்டிப்பழகிப்பார்த்துவிட்டேன். ஒருவரிடமும் தங்கள்பால் நான் காணுகின்ற உண்மையின் ஒளி, அன்பின் திறம், நட்பின் பான்மை இவற்றில் ஆயிரத்தில் ஒருபகுதிகூடக் காண இயலவேயில்லை. எங்கும் போலியன்பும், ஆரவாரமும், போலி நட்பும், புனைவுச் செயல்களும் நிறைந்தே காணப்படுகின்றன. சிலர் தங்கள் மனைவி மக்களிடம் கொண்டுள்ள அன்பும் போலித்தனமானதே என்பதைக் காணும்பொழுது வருந்தத்தான் வேண்டியிருக்கின்றது...தாங்கள் நான் அங்கு வந்தபொழுது ''வாழ்க்கையில் இதுதான் மலர் என்று மலர்களைப் பறித்து மகிழ்வதாகக் கூறிக்கொண்டு இலையைப் பறித்து மகிழ்ந்து கொண்டிருக்கின்றோம்''-என்று கூறினீர்களே அஃது எவ்வளவு உண்மை! அதை எண்ணும் பொழுது இங்கு நாங்கள் உதிர்ந்த சருகுகளைப் பொறுக்கிக்கொண்டு, இதுதான் மலர் என்று மகிழ்வதுபோல் அன்றோ இருக்கின்றது...இறுதியாக, நான் வேண்டுவதும் விரும்புவதும் ஒன்றே ஒன்றுதான் அது தங்களின் பேரன்பு ஒன்றே! அதுவே எனக்கு இவ்வுலகில், நான் கருதுகின்ற செல்வம்! பிற செல்வமல்ல......

-'செம்பியன்' (முன்னாள் தென்மொழி உறுப்பாசிரியர்) சென்னை-2.

எண்: 187: பாவாணரின் ஆங்கில உரைத்திறன்!

பேரன்புமிகு தண்டமிழ்த் தலைவரே, வணக்கம். தனித்தமிழ்த்திங்களேடான நந்தம் தென்மொழியின் கண் ஆசிரியவுரையாக 'அந்தோ வெங்காலூர்த் தமிழர்படும்பாடு! எனுந்தலைப்பில் மொழிப் பேரறிஞர் பாவாணர் அவர்களின் உள்ளத் துயரால் வெளிப்போந்த சொற்

(அடுத்தபக்கம் பார்க்க)

ருெ_ர்களைக் கண்ணுற்றேன். ஏனை வெங்காலூர்த் தமிழர்களும் இவ் வுரையைப் படிப்பார்களானால் அவர்களும் தங்கள் பாகுபாடுகளை நீக்கிப் பாவலரின் பக்கல் சேர்ந்து தமிழைத் தழைத்தோங்கச் செய் வார்களென எண்ணுகிறேன். அவரது ஆங்கில உரையும், ஒரு மாண வனுக்கு ஆசிரியர் எடுத்துக்காட்டுகளுடன் அவன் மனத்தில் பதியு மாறு உரையாற்றுவதுபோல் ஒருநாட்டின் முதலமைச்சருக்கு எளி தில் புரியுமளவுக்கு உரைத்துள்ள திறமை எண்ணிஎண்ணி இறும்பூ தெய்தினேன். தேன்தமிழறிவுரை என்றும் பொன்ருது பொலிக.

–சி. மு. அன்புக்கரசன், பெங்களூர்-2-அ.

எண்: 198: தென்மொழிதரும் விடுதலை மருந்து!

மதிப்புக்குரிய ஐயா, வணக்கம். தாங்கள் பல இடர்ப்பாடுகட் கிடையில் 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' வாயிலாகத் தமிழுக்காக ஆற்றிவரும் சீரிய நற்றுெண்டை உண்மையான நந்தமிழன்பர் எவ ரும் மறுக்கமாட்டார்கள்; மறக்கமாட்டார்கள். இற்றையநாள் நஞ்சு போல் மஞ்சள் தாளிகைகளான, 'கல்கண்டு' 'தினத்தந்தி' 'மாலை முரசு' 'கல்கி' 'முரசொலி'' நாத்திகம்' –பரவியிருக்கின்றனவே ஒழிய, தூய தனித்தமிழ்ப் பணிபுரியும் நம் இதழ்கள் பரவவில்லை. இதற்குக் காரணியம் மக்களின் அறியாமையேயாம். மக்களின் அடிமைத்தனமும் இன்றளவும் தினையளவும் குறைந்ததாகச் சொல்லல் இயலாது. தமிழ னின் சோம்பல், அறியாமை, அடிமைத்தனம் அடியோடு என்று நீங்குகின்றதோ அன்றே, தமிழ்மொழி வாழும்; வளரும். எனவே, நீங்கள் செலுத்தும் நன்மருந்து இன்றில்லாவிட்டாலும் நாளையாவது நல்ல வேலைசெய்யும் என்ற மனத்திண்மை இருப்பதால் மனம் ஓரளவு அமைதி அடைகிறது.

–புலவர் பெ. தமிழ்ப்பித்தன், போடி–மீனுட்சிபுரம்

எண்: 189: ஆசிரியவுரையும் நூருசிரியமும்!

பொதுவாகத் தமிழன் என்ற முறையில் தனித்தமிழ் இதழாகிய "தென்மொழி"யை விரும்பிச் சுவைக்கிறேன் என்ருலும், சிறப்பாகத் தங்களின் நூருசிரியத்திற்காகவும், ஆசிரியவுரைக்காகவும் மேன் மேலும் விரும்பிச் சுவைக்கிறேன். எனவே நூருசிரியத்தைத் தவரு மல் வெளியிடும்படி அன்புடன் பன்முறை வேண்டுகின்றேன்.

–அ. மாயிறைவன், கண்டமாத்தான், தொழுதூர்.

எண்: 190: நமக்குத் தாய் ஒருத்தியே!

அன்பு கெழுமிய, ஐயா! வாழிய நீடுழி. வண்டமிழ் வளர்க்கும், தங்களின், தணியாத தமிழ்ப்பற்றை உன்னும் போழ்து எனக்குப் பொருமையே உண்டாகிறது. காரணம் என் போன்றோரை ஈன் றெடுத்தவளும் தமிழ்த்தாயே! இருந்தும் தங்கட்கு உள்ள உணர்வும், பற்றும், சமும்-வானென, நீரென-நிலமென அளவிடற்கரிதாக வுள்ளது. எங்கட்கோ, தங்கள் பற்றில், 10 விழுக்காடு தமிழ்ப்பற்று இருக்குமா எனில் ஐயம்தான்.

–மா. ப. கனகராசு, துவரங்குறிச்சி, திருச்சி.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.